26th May 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 32 | பக்கங்கள் - 13

editor.uthay[illegible]n@gm[illegible]



# தேர்தல் வந்தால் காளான் முளைப்பது போன்று பயங்கரவாத கைதுகள் இடம்பெறும்!

## அக்குறணை நூல் வெளியீட்டு விழாவில் ஹக்கீம் ஆவேஷம்

- அண்டை நாட்டில் நால்வர் கைது - பரபரப்பு செய்தி
- இதன் பின்னணி பெரும் ஆபத்தானது

தேர்தல் வந்தால் காளான்கள் முளைப்பது போன்று எங்காவது ஒரு பக்கத்தில் நாட்டில் பயங்கரவாதத்தின் பேரில் கைது செய்யப்படுவார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அக்குறணை ஐடெக் கல்வி நிலையம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடத்திய எழுத்தாளர், ஐடீஎன் வசந்தம் செய்தி சிரேஷ்ட ஊடகவியலாளர்

02ம் பக்கம்பார்க்க...

# கண்டி தலதா மாளிகையில் பாகிஸ்தான் அருங்காட்சியகம்

## பாகிஸ்தான் தூதுவரால் திறந்து வைப்பு!



(இக்பால் அலி)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் பௌத்த நூதனசாலையினுள்ளே அமைந்துள்ள பாக்கிஸ்தான் நாட்டினது பௌத்த அருங்காட்சியகம் முழுமையாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மக்களின் பார்வைக்காக மீளவும் திறந்து வைக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பாக்கிஸ்தான் நாட்டு உயர்ஸ்தாகர் பாஹிம் உல் அஸீஸ் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதன் போது கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க மற்றும் இலங்கைக்கான

03ம் பக்கம்பார்க்க...

# கைதாகிய இலங்கையர்களுக்கு பயங்கரவாதத்துடன் தொடர்பில்லை

## திடீர் கைதால் சந்தேகம் வலுக்கிறது

### பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் ஐ.எஸ். தொடர்பில்லை என்கிறார்

இந்தியாவின் அஹமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் விமான நிலையத்தில் கைதாகிய நான்கு இலங்கையர்களுக்கும் ஐ.எஸ்,ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும் திடீரென எழுந்த இந்த சம்பவத்தின் பின்னணியில் பெரும் சந்தேகமிருப்பதாகவும் சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

03ம் பக்கம்பார்க்க...

# ஓய்வு பெற்ற அம்ஸாவுக்கு ரஷ்யாவின் பதில் தூதுவர் பதவி

சவூதி தூதுவராக இருந்து வெளிவிவகார சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஏ.எம் அம்ஸா இலங்கைக்கான ரஷ்யாவின் பதில் தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

03ம் பக்கம்பார்க்க...

# ரபா மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்தவும்

## சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவு!

தெற்கு காசா பகுதியின் ரஃபா நகரின் மீதான இராணுவத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிவாரண உதவிகள் காசா பகுதிக்குள் நுழைய அனுமதிக்கும் வகையில் ரஃபாவில் உள்ள எகிப்திய எல்லைக் கடவையை திறக்குமாறும் சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும்,

03ம் பக்கம்பார்க்க...

# உலமாக்களின் வரலாற்று பங்களிப்புக்கள் கண்டிப்பாக கௌரவிக்கப்பட வேண்டும்

## உலமாக்கள் கௌரவிப்பில் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் வேண்டுகோள்



(ஐ.ஏ. காதிர் கான்)

கம்பஹா மாவட்ட உலமாக்களாக இருக்கலாம். ஏனைய பகுதிகளைச் சேர்ந்த உலமாக்களாக இருக்கலாம். இந்த நாட்டிலே

06ம் பக்கம்பார்க்க...

# வெளிவிவகார போட்டி பரீட்சை

## தேர்வில் முஸ்லிம்கள் புறக்கணிப்பு

### பல்வேறு மட்டத்திலும் கவலை

வெளிவிவகார அமைச்சினால் இலங்கை வெளிவிவகார சேவைக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 20 பேர் தெரிவு

03ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## தேர்தல்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

கவிஞர் இக்பால் அலி எழுதிய காலத்தின் கால்கள் (திறன்நோக்கு கட்டுரைத்தொகுதி) குரங்குத் தம்பி (சிறுவர் பாடல்கள்) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அக்குறணை ஐடெக் கல்வி நிலைய மண்டபத்தில் இயக்குனர் ஐ. ஐனுடீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்

முதன்மை விருந்தினர்களாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம். அவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர், கண்டி மாவட்ட அமைப்பாளர், ஐக்கிய மக்கள் சக்தி யின் அமைப்பாளர் எம். எச். ஏ. ஹலீம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஏதாவது ஒன்று நடந்தால் பாராளுமன்றத்தை அதை அரங்கமாகப்பயன்படுத்தி பிரபல்யமாகப் பேசி பெரும் தேசியவாதக் கொள்யைுடைவர்கள் இருப்பவர்கள் உள்ளார்கள். மூன்று தினங்களில் பத்திரிகைகளில் பெரும் பரபரப்பு செய்திகள் வந்தன. அது அண்டைய நாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் பயங்கரவாதத்திற்குத் தயார் ஆகின்றார்கள் என்ற ஒரு செய்தி. இது மிகவுப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விசயம். இதனுடைய பின்னணியைப் பற்றி பத்திரிகையில் வரும் போதுதான் எமக்குத் தெரியும். ஏனென்றால் உயிர்த்த ஞாயிறு சம்பவம் நடந்தது அப்படித்தான். பின்புதான் நாங்கள் கண்டோம். இதற்குப் பின்னால் ஒரு விசமம் இருக்கிறது என்பதைத் தேடிப் பார்ப்பதும் இல்லை.

இது தொடர்பில் ஒருவர் முன்னை நாள் நடந்த நிகழ்ச்சி குறித்து மறுநாள் அது தொடர்பில் அக்கு வேறாக ஆணி வேறாக கிட்ட நின்று கண்டமாதரி எடுத்த எடுப்பிலே ஆங்கிலப் பத்திரிகையில் எழுதுகிறார் எனில் அவருக்கு அந்த விசயம் இவ்வாறு எழுதுப்பட வேண்டும் என்று கொடுக்கப்பட்டுள்ளது. அவருடை எஜமானர்கள் எழுதத் தூண்டி இருக்கிறார்கள். சும்மா அல்ல

உண்மையில் தீவிரவாதம் என்பது எந்த சமுயத்திலும் இருக்கக் கூடாது. இந்த தீவிர வாதம் இருப்பதாக பேராசிரியர் ஒருவர் பத்திரிகையில் எழுதியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு ஒருவர் புத்தகம் எழுதினார். அவர் ஓர் உண்மையான பேராசிரியர். அவர் கணிதப் பேராசிரியர். பேராசிரியர் ராஜன் ஹூ/ல். மிக ஆழமாக ஆய்வு செய்யப்பட்ட ஒரு புத்தகம். இந்தப் பின்னணியைக் குறித்து இன்னும் இந்தத் தடுமாற்றத்தில் இருக்கின்ற இலங்கையருக்கு உண்மை சொல்லப்பட வேண்டும் என்பதற்காக இதிலுள்ள பின்னணியை ஆய்வு செய்கிற போது மிகத் தெளிவாக அவர் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னணியில் நிச்சயமாக உளவுத் துறையினுருடைய பெரும் சதி அரங்கேறி இருக்கிறது. இதைத் தான் கிறிஸ்தவருடைய பேராயர் கார்டினல் ரஞ்ஜித் மல்கம் ஆண்டகை அடிக்கடி பேசுகிறார். உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும். உண்மையை மறைக்கின்றீர்கள் என்று சொல்லுகிறார். ஆனால் இன்னுமின்னும் இந்த விசயங்கள் பூதாகரமாக மாறிக் கொண்டு செல்லுகின்றது. திடீரென்று இலங்கையில் இருந்து வரும் பயங்கரவாதிகள் எங்கேயாவது பக்கத்தில் தேர்தல் நடக்கும் போதுதான் வருவார்கள். இது என்னவென்று விளங்குவதில்லை. தேர்தல் காலத்தில் மழை காலத்தில் வரும் காளான்கள் முளைப்பதைப் போன்று தேர்தல் காலத்தில் காலான் முளைக்கிற விசயத்தை திடீரென்று கண்டு பிடிப்பார்கள்.

நேற்று சக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் .இந்த நான்கு பேரின் கைது தொடர்பில் அவருக்கும் இது பற்றி கவலையாகும். அவர் கொழும்பு மத்தியின் பாராளுமன்ற உறுப்பினர். அவர் என்னிடம் வந்து கைது செய்யப்பட்ட நான்கு பேருடைய பின்னணியைப் பற்றி சுட்டிக் காட்டினார். இவர்கள்தான் வாப்பா உம்மா, அவர்கள் இருப்பது மாளிகாவத்தையாகும். எந்த இடம். இன்னென்ன ஆட்கள் என்று அவர் அங்கு கைது செய்யப்பட்டவர்களுடைய பின்னணியைச் சொன்னார். அப்பொழுது எமக்கு நன்கு விளங்கி விட்டது. ஆனாலும் அவர்களுக்கும் பயங்கரவாதத்ததிற்கும் பின்னணி இருக்கிறதோ இல்லையோ என்று நான் தீர்ப்புச் சொல்ல வரவில்லை. ஆனால் நிச்சயமாக இலகுவாக எதற்குப் பாவிக்கப்பட கூடியவர்கள். அப்பாவிகளையும் இன்றைக்கு பயங்கரவாதிகளாக ஆக்கி விடலாம். அப்படியான சட்டங்கள் எங்களிடம் இருக்கின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று சொல்வது வேறு ஒரு காரணம். ஒன்றும் இல்லை. பயங்கரவாதத தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது இந்த நாட்டில் நாற்பது வருடங்களுக்கு மேலாகிறது.

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27வது வருடாந்த மாநாடு

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27வது வருடாந்த மாநாடு 2024 ஜீன் மாதம் 30ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன் போது 2024/25இற்கான புதிய செயற்குழு தெரிவு செய்யப் படவுள்ளது.

புதிய செயற்குழுவை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தலைவர் (01), செயலாளர் (01), பொருளாளர் (01), செயற்குழு உறுப்பினர்கள் (15) ஆகிய பதவி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 15.06.2024**

மேலதிக விபரங்களை செயலாளர், 41/2, விஜித ரோட், நதிமால, தெஹிவளை என்ற முகவரியிலோ அல்லது NM.அமீன் (தலைவர்) அவர்களை 0772612288 என்ற தொலைபேசி இலக்கத்திலோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**ஷிஹார் அனீஸ்**
**பொதுச்செயலாளர் – ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்**
**25.04.2024**






## கைதாகிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நால்வரும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் அல்ல என்பதை உளவுப் பிரிவு கண்டறிந்துள்ளதாகவும் இது தொடர்பான அறிக்கையொன்றினை தயார் செய்து பாதுகாப்பு சபையிடம் கையளிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகவும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு பேரும் கடந்த 19 ஆம் திகதி சுற்றுலா வீசாவில் இந்தியா புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

இவர்களுள் ஒருவர் பொட்ட நௌபரின் மகனான முஹம்மது நௌபர் நியாஸ் சப்ராஸ் ஆவார்.

ஏனைய மூவரும் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கும் கிபுல அலே குணா என்றலைக்கப்படும் பாதாள உலகக் கோஷ்டி தலைவரின் அடியாட்களாவர்.இவர்களின் வீடுகளில் பாதுகாப்புத் தரப்பினர் சோதனைகளை நடாத்திய போதிலும் சந்தேகத்துக்குரிய எந்த வித தடயங்களும் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திடீரென இவ்வாறானதொரு சம்பவம் தோற்றுவிக்கப்பட்டிருப்பது குறித்து பாதுகாப்பு தரப்பினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.இந்தியாவில் இன்னும் தேர்தல் நிறைவு பெறாமை இலங்கையில் தேர்தலொன்று அண்மித்துள்ள நிலையில் மீண்டும் ஐ.எஸ் ,ஐ.எஸ் பற்றிய தலைப்பொன்று ஊடகங்களில் பெரிதுபடுத்தப்பட்டுள்ளமை குறித்தும் பாதுகாப்பு ஆய்வாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## வெளிவிவகார...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒருவர் கூட இடம்பெறவில்லை என அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடா வருடம் இந்த சேவைக்கு போட்டிப் பரீட்சை மூலமே ஆட்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

அவ்வாறான போட்டிப் பரிட்சையில் இம்முறை ஒரு முஸ்லிம் கூட இடம்பெறவில்லை என்பது குறித்து பலராலும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

அரசின் முக்கியஸ்தர் ஒருவரின் உறவினரும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தற்போது வெளிவிவகார அமைச்சராக இருக்கும் நிலையில் இவ்வாறு ஒரு சமூகத்தினர் புறக்கணிக்கப்பட்டுள்ளமை பலராலும் கேள்விக்குள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கண்டி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கிஸ்தான் நாட்டின் கவுன்சிலர் அப்சல் மரைக்கார் உள்ளிட்ட பலர் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பௌத்தம் பாகிஸ்தானுக்கு ஒரு வளமான வரலாற்றையும் கலை மற்றும் கட்டிடக்கலையையும் அளித்துள்ளது. அதன் பல இடிபாடுகள் இன்றும் காந்தாரப் பகுதியில் காணப்படுகின்றன. 2300 ஆண்டுகளுக்கு முன்பு, முதல் மௌரிய மன்னரான அசோகரின் கீழ் பௌத்தம் பாகிஸ்தானில் பரவியதாகவும், அது அரசால் ஆதரிக்கப்பட்டதாகவும் பாகிஸ்தானின் வரலாறு சாட்சியமளிக்கிறது.



இதன் அடிப்படையில் பாகிஸ்தானிய பௌத்தத்தை சித்தரிக்கும் கண்காட்சி அரங்கம் உள்ளது.

## ரபா...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உத்தரவை இஸ்ரேல் கடைப்பிடிக்கும் என்று எதிர்பார்க்காவிட்டாலும், இந்த உத்தரவு இஸ்ரேலை சர்வதேச அளவில் மேலும் தனிமைப்படுத்தும் என வெளிநாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

சர்வதேச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு நெருக்கமானவர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

நெதன்யாகு அரசாங்கத்தின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் எய்லோன் லெவி, “இந்த உத்தரவை அறிவித்த பதினைந்து பேர் கொண்ட நீதிபதி குழாமின் தலைவர் நவாப் சலாம் லெபனான் குடிமகன் என்றும் தவறான உத்தரவு வழங்கப்பட்டிருந்தால் அவருக்கு மீண்டும் பத்திரமாக லெபனானுக்குத் திரும்பும் வாய்ப்பு கிடைக்காது“ என தெரிவித்தார்.

பலஸ்தீன மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் இஸ்ரேலியப் படைகள் ரஃபா நகரில் தாக்குதல் நடத்துவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தென்னாபிரிக்க சட்டத்தரணிகள் சர்வதேச நீதிமன்றத்திடம் விடுத்த கோரிக்கையை ஏற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடர்பாக இந்த ஆண்டு மூன்றாவது முறையாக சர்வதேச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பதினைந்து நீதிபதிகள் கொண்ட குழாமில் பதின்மூன்று நீதிபதிகளின் உடன்பாட்டுடன் சர்வதேச நீதிமன்றம் இந்த உத்தரவை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஓய்வுபெற்ற...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவூதி அரேபிய தூதுவராக கடமையாற்றி நாடு திரும்பிய மறு கணமே ரஷ்ய பதில் தூதுவராக ஜநியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் பெல்ஜியம்,லக்சம்பேர்க், துருக்கி, ஜோர்ஜியா,உக்ரேன்,சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் தூதுவராகவும், லண்டன், சென்னையில் பிரதி தூதுவராகவும் பணியாற்றியுள்ளதோடு வெளிவிவகார சேவையில் 30 வருட கால நீண்ட கால அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.


பிராந்திய நிருபர்களுக்கான திறந்த விண்ணப்பம்

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

பத்திரிகைத் துறையில் முன்னணி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.
எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல்:
moonmedia178@gmail.com

Whatsapp / Call:
070 239 7210

Moon Media (Pvt) Ltd
41/2, Vijitha Road,
Nadhimala, Dehiwala.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MAY 26 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# காஸா நிதியை உரிய இடத்தில் சேர்ப்பது ஜனாதிபதியின் பொறுப்பு

பேருவளை சீனன்கோட்டை பள்ளிவாயல் சங்கம் மற்றும் சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்கம் இணைந்து பாலஸ்தீன காஸா சிறுவர் நிதியத்திற்காக சேகரித்த 40,198,902 (04 கோடி) ரூபாவிற்கும் மேற்பட்ட நிதியை அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்தனர்.

இது போன்று மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து சேகரித்த 30 இலட்சம் ரூபா விற்கு மேற்பட்ட பணத்தையும் அண்மையில் இந்த நிதியத்திற்காக ஜனாதிபதியிடம் கையளித்தனர். இவ்வாறாக நாட்டின் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம் மக்கள் இந்த நிதியத்திற்காக சேகரித்த இலட்சக்கணக்கான ரூபாய் நிதிகளை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இப்போது கோடிக்கணக்கிலான பணம் இந்த நிதியத்தை வந்தடைந்திருக்கிறது. ஏன் எமது இலங்கை மக்கள் இவ்வாறு உதவிக்கரம் நீட்ட முன்வந்தனர்? எமது நாட்டில் செல்வ வளம் பொழிகின்றதா? நாம் மிகவும் கஷ்டமான நிலையிலும் ஆடம்பரமான சுகபோகங்களை அனுபவிக்கிறோமா? இல்லை. இப்போது இந்த நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஒன்று தொடரும் நிலையில் காஸாவை விட மோசமான வாழ்க்கையை இங்கு வாழும் நிலையிலும் கூட, பாலஸ்தீனம், காஸாவில் இஸ்ரேலின் பலமான அடி காரணமாக ஏற்பட்ட வலியையும் வேதனைகளையும் உணர்ந்தவர்களாக, எம் நாட்டு மக்கள் பாலஸ்தீன மக்களை எமது உடன் பிறப்புகளாக கருதுகின்றனர்.

அதன் காரணமாகவே இவ்வாறு இங்கு நாம் அனுபவிக்கும் துன்பங்களையும் துயரங்களையும் ஒரு புறம் தள்ளி விட்டு, காஸா சிறுவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கைக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக உதவிக்கரம் நீட்டும் எண்ணத்தில் நிதிகளை சேகரிக்குமாறும், 2024.05.31ஆம் திகதிக்கு முன்னர் இந்த சிறுவர் நிதியத்திற்கான உதவிகளை அனுப்பி வைக்குமாறும் ஜனாதிபதி செயலகம் வேண்டுகோள் விடுத்து இருக்கின்றது. ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை (30 கோடி ரூபாய்) ஐ.நா அமைப்புக்கு ஊடாக அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி இந்த நிதியத்தை ஆரம்பித்ததன் நோக்கம் இஸ்ரேலின் குண்டுகளினால் அழிக்கப்பட்டுள்ள காஸா சிறுவர்களுக்காக ஒரு பாடசாலையை இலங்கை மக்களின் பங்களிப்பு மூலமாக நிர்மாணிக்க வேண்டும் என்ற உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காகும்.

ஆரம்பிக்கப்பட்ட நோக்கமும் குறிக்கோளும் நன்றாக இருந்தாலும் இந்த பணம் உரிய இடத்திற்கு சரியான முறையில் சென்றடைகின்றதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே கடந்த 2022 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில், இலங்கையில் ஜனாதிபதி செயலகமும், ஜனாதிபதியின் கீழ் இயங்கிய சில நிதியங்களும் பல்வேறு காரணங்களை காட்டி நிதிகளை சேகரித்துள்ளன.

உதாரணமாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் (சில் ரெதி) வெள்ளைப் புடவை மற்றும் சிரிலிய என்று இடம்பெற்ற மோசடிகளும் எமக்கு நினைவிருக்கின்றன.

அத்துடன் காஸா, பாலஸ்தீனம் என்று எடுத்துக் கொண்டால் யாருக்கு கொடுப்பது, எங்கு, எப்போது கொண்டு போய் சேர்ப்பது என்று பல பிரச்சனைகளும் கேள்விகளும் உள்ளன. யாராவது நிறுவனங்கள் அல்லது தனி நபர்கள் பாலஸ்தீனத்தின் பெயரால் அப்பாவி மக்களால் திரட்டப்பட்ட இந்த கோடிக்கணக்கான நிதியை விழுங்கி ஏப்பம் விட்டாலும் யாருக்கும் தெரியப்போவதில்லை.

ஆகையால், ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்திற்கு பொறுப்பாளி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆவார். இந்த நிதியை ஏப்பம் விடும் நிலை உருவாகாமல் வழங்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக உரிய இடத்திற்கு கொண்டு சேர்ப்பது ஜனாதிபதியின் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.





பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 199 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அனுராதபுரம், கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (25) இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந் நிகழ்வில் பங்கேற்று ஸ்மார்ட் வகுப்பறையை திறந்து வைத்தார்.

# தர்காநகர் ஸாஹிராவின் 1982 ஓ.எல் மாணவர் ஒன்றுகூடல்






(பீ எம் முக்தார்)

ழூதர்கா நகர் ஸாகிரா மஹா வித்தியாலயத்தில் 1982 வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சி 23ஃ05ஃ2024 தர்கா நகர் மீரிப்பென்னை நதா ஹோட்டலில் காலை முதல் மாலை வரை இடம்பெற்றது. மேற்படி ஒன்று கூடலில் எதிர்காலத்தில் சமூக, சமய, கலாச்சார விடயங்களில் கரிசனை காட்டுவதற்காக நிர்வாக குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. தலைவர் ஏ.ஜே.எம்.பாரி, செயலாளர் ஏ.ஐ.எம்.பஹ்மி. பொருளாளர் ஏ. பீ. எம். ஸூஹைர். உப தலைவர்களாக. எம். இஸட். எம். அமீஸ். எம். டீ. எம். அஸ்லம். எம். எஸ். எம். ஸரபான். உப செயலாளர்களாக எம்.ஆர். எம்.ஹில்மி.எம்.என்.நியாஸ் அஹமட். உப பொருளாளர்களாக இஸட்.ஏ.எம். ரஸ்லான் எம் .எஸ். எம். பைஸர். மற்றும் கமிட்டி அங்கத்தவர்களாக ஏ. எம். யூசுப்ஐத்ரூஸ். எஸ்.

எம். எம். நிஹ்மத்துல்லாஹ். என். எம். எம். ஐத்ரூஸ். ஏ .எச். எம். பஸ்மி. எம்.வை. எம் அஸ்லம். ஏ .ஆர். எம். அன்வர். எம். எம். ருஸ்பி(ரிஸ்வி), எச் .ஏ. ஸிபர் இஸ்மாயில். எம். டீ. எம். நதீக். ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

# முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காக ரூமி ஹாசீம் பவுண்டேஷனின் பணி மகத்தானது

## முன்னாள் எம் பீ.எம்.எஸ்.எம் அஸ்லம்









(பீ.எம்.முக்தார்)

விஞ்ஞான கல்வி செயற்திட்டத்தினூடாக முஸ்லிம் சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்காக ரூமி ஹாஷிம் பவுண்டேசன் மேற்கொள்ளும் பணி மகத்தானதாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். எம்.அஸ்லம் ஹாஜியார் கூறினார்.

தர்கா நகர் இஷாஅத்துல் இஸ்லாம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டில் கா.பொ.த.உயர்தர உயர் வகுப்பு விஞ்ஞான பிரிவில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களை தர்கா நகர் விஞ்ஞான கல்விப் பிரிவில் இணைத்துக்கொள்வது தொடர்பாக பெற்றோர்-மாணவர்களுக்கான விசேட கூட்டத்தில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

மேற்படி விஞ்ஞான கல்வி பிரிவு ஸ்தாபகரும் ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் தலைவருமான டொக்டர் ரூமி ஹாஷிம்,செயலாளர் எம்.ஜெஸுக் அஹமட்,இணைப்பாளர் ரபீஸ் ஹம்ஸா, தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்க தலைவர் ஏ.பி.எம்.ஸுஹைர் ஹாஜியார்,அல்-ஹம்ரா அதிபர் பஸ்லியா,முன்னாள் எம்.இஸட்.எம். நயீம்,ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் ரீ.எம்.ஸபா உட்பட விஞ்ஞான பிரிவு விரிவுரையாளர்கள்,அரசியல்வாதிகள்,முக்கியஸ்தர்கள் பலரும் இக்கூட்டத்தில் பங்கு பற்றினர்.

முன்னாள் எம்.பி. அஸ்லம் ஹாஜியார் மேலும் கூறியதாவது தர்கா நகரினதும் களுத்துறை மாவட்டம் முஸ்லிம் களினதும் மட்டுமல்லாது நாட்டு முஸ்லிம் மக்களின் விஞ்ஞான கல்வி முன்னேற்றத்திற்காக காலத்தையும்,நேரத்தையும்,பணத்தையும் செலவு செய்யும் டொக்டர் ரூமி ஹாசிமை சமூகம் பாராட்ட வேண்டும். 1915 ஆம் ஆண்டு ஸப்வான் ஆசிரியரினால் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான கல்வி செயற்திட்டத்தை டொக்டர் ரூமி ஹாசிம் பொறுப்பேற்று வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கிறார் 6 - 7 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தில் இன்று 100 மாணவர்கள் இணைந்துள்ளனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் நன்றாக கல்வி கற்று வைத்தியராக வரவேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

அந்த எதிர்பார்ப்பு இத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுகிறது.பிள்ளைகளின் மேலஅதிக வகுப்புகளுக்காக பெற்றோர்கள் பெருமளவு பணத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் இப்படி பெரும் தொகை பணத்தை செலவிடுவது கஷ்டமான காரியம் ஆகும்.விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் ஒரு செயற் திட்டத்தை தொடங்கியுள்ளமைய்யானது மாணவர்களுக்கு கிடைத்துள்ள ஓர் அதிஷ்டமாகும்.

தர்கா நகர் ஒரு யுகத்தில் கல்வியில் கொடிகட்டி பறந்த பிரதேசமாகும். மீண்டும் அந்த நிலை உருவாக வேண்டும். பெண்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த விஞ்ஞான செயல்திட்டத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டும். ரூமி ஹாஷிமின் பெற்றோர்கள் கல்விக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள். ஆசிரியர்களாக இருந்து தியாகத்துடன் கடமையாற்றினர். இன்று அவரது புதல்வர் ரூமி ஹாஷிம் கல்விக்காக தமது செல்வத்தை வாரி செலவு செய்கிறார் என்றார்.

**இலங்கை வந்துள்ள சிங்கப்பூரிலுள்ள ரோயல் கிங்ஸ் நிறுவன ஸ்தாபகரும், பிரதம இயக்குணருமான சிறாஜுதீன் உதயம் பத்திரிகையின் விஷேட வணிக நேர்காணலில் வழங்கிய சிறப்புப் பேட்டி:**








**ரோயல் கிங்ஸ் நிறுவனம் வளர்ச்சிப் பாதையை எட்டியிருக்கின்ற இந் நிலையில், இந்த நிறுவனத்தின் ஆரம்பம் மற்றும் செயற்பாடுகள் எவ்வாறானவை?**

2013ம் ஆண்டளவில் சிங்கப்பூரில் ஆரம்பிக்கப்பட்ட எமது ரோயல் கிங்ஸ் நிறுவனமானது ஆரம்பத்தில் Trading, IT, Gold ஆகிய துறைகளை அடிப்படை வர்த்தகமாக கொண்டியங்கியது. இவ்வாறு பெற்றுக் கொடுத்தல், கம்பனி பதிவு மற்றும் கணக்கீடு தொடர்பான ஆலோசனைகள் வழிகாட்டல்கள் உட்பட அனைத்து வகையிலான வசதிகளையும் செய்து கொடுக்கின்றது.

இந்த சேவையை இலங்கையில் உள்ளவர்களும் பெற்றுக் கொள்ள முடியும். இங்கிருந்து யாராவது சிங்கப்பூரில் வியாபாரம் செய்வதற்காகவோ அல்லது வர்த்தகத்தில் ஈடுபடுவதற்காகவோ ரோயல் கிங்ஸ் நிறுவனம் முழு உத்தரவாதம் தரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நாங்கள் கூட ரோயல் கிங்ஸ் நிறுவனத்தினால் கடல்சார் உணவு (Sea Food Trade) வர்த்தகத்தினை மேற்கொண்டிருந்தோம். அதற்காக இலங்கையிலிருந்துதான் நண்டு, இறால் தொழிலாளர்கள் யாரையும் விலக்கிவிடாமல் அவர்களுக்கான சம்பளங்களை வழங்கியே வந்தோம். அதற்காக

# சிங்கப்பூரில் தசாப்தம் கடந்து வெற்றிநடை போடும் ரோயல் கிங்ஸ்

## இலங்கையர்களும் சிங்கப்பூரில் இலகுவாக வர்த்தகம் செய்ய பூரண அங்கீகாரம்

ஆரம்பிக்கப்பட்ட ரோயல் கிங்ஸ் சுமார் ஒரு தசாப்தத்தை கடந்த நிலையில் இன்று ஹாங்கொங், இந்தோனேஷியா போன்ற நாடுகளிலும் தனது நிறுவனத்தை நிறுவியுள்ளது. மேலும், மலேசியாவிலும் ரோயல் கிங்ஸ் நிறுவனத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதே நேரம், வாய்ப்புகள் கைகூடுமாக இருந்தால் இலங்கையிலும் ரோயல் கிங்ஸ் நிறுவனத்தை எதிர்காலத்தில் நிறுவுவதற்கு முயற்சி செய்கின்றோம்.

**இலங்கை சமீபத்தில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் அது தற்போது நிலைபேறி வருகின்ற சந்தர்ப்பத்தில், எவ்வாறான சாத்தியப்பாடுகள் மூலம் உங்கள் நிறுவனத்தை இலங்கையில் ஆரம்பிக்க நினைக்கின்றீர்கள்?**

பொதுவாக வர்த்தகம் என வந்துவிட்டால் இலாப, நஷ்டங்கள் இயல்பாகவே இருக்கும். அவற்றுக்கு பயந்து முயற்சியை கைவிட முடியாது. இலங்கையில் வர்த்தகத்தை நிறுவுவதால் வியாபாரம் விஸ்தரிக்கப்படுமா? அல்லது நஷ்டமடையுமா? என்பதை விட நிலையான அரசாங்கமொன்றின் அங்கீகாரம் எமக்கும் கிடைக்குமானால் அந்த நம்பிக்கையை மேற்கொண்டு வர்த்தகங்களுக்கு முதலீடுகளை செய்வதில் நம்பிக்கையாக களமிறங்க முடியும்.

**ரோயல் கிங்ஸ் நிறுவனம் சிங்கப்பூரில் எவ்வாறான சேவைகளை வழங்குகின்றது?**

ரோயல் கிங்ஸ் நிறுவனமானது இரண்டு வகையான வர்த்தக உரிமங்களை சிங்கப்பூரில் அரச அங்கீகரத்தினைப் பெற்று செயற்படுகின்றது. அதனடிப்படையில், ROYAL KING PTE LTD மற்றும் ROYAL KINGS CONSULTANCY PTE LTD ஆகிய இரண்டு கம்பனிகள் உள்ளன.

இதில், Royal Kings PTE LTD ஆனது Trading சம்பந்தமான விடயங்களை செய்து கொண்டிருக்கின்றது. Royal Kings Consultancy PTE LTD ஆனது சிங்கப்பூரில் தொழில் முனைவோருக்கு தொழில் உரிமங்களை

முற்படுவார்களேயானால், அவர்களுக்கான பூரண வழிகாட்டுதல்கள் மற்றும் பதிவு செய்தலுக்கான நடைமுறைகள் உட்பட தொழில் உத்தரவாதத்துக்கான

> **தொழிலின் இரகசியம் "நேர்மை"**
>
> **ஒரு நிறுவனத்தினுடைய வளர்ச்சியின் முக்கிய பங்காளர்கள் அதன் ஊழியர்கள் தான். அவர்களை நாம் எப்போதும் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களை திடீரென தொழிலை விட்டு நீக்கி நடுத்தெருவுக்கு ஆக்கினோம் என்றால், அவை எமது நிறுவனத்தின் எதிர்காலத்திற்கு பெரும் பாவமாக அமைந்துவிடும்.**

ஆலோசனைகளையும் எங்களால் வழங்கிட முடியும்.

குறிப்பாக, இலங்கையர்களுக்கான தொழில் ரீதியான வாய்ப்புக்கள் சிங்கப்பூரில் அதிகமாக உள்ளது. இங்கிருக்கின்ற வளங்கள் மிகவும் பெறுமதியானவை. ஆகையால், தங்களது முயற்சிகளை உறுதியாகக் கொள்வதன் மூலம் தொழில் நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு எமது

போன்றவற்றை பெற்றுக்கொண்டோம்.

மேலும், எமது நிறுவனத்தினூடாக பயனடைய விரும்புபவர்களுக்கு முழு உத்தரவாதத்தினையும், நம்பிக்கையையும் வழங்குவதோடு, ரோயல் கிங்ஸ் பற்றிய முழு விபரங்களையும் www.royalkingsgroup.com எமது என்ற இணையதளத்தினூடாக அறிந்து கொள்ள முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுமார் ஒரு தசாப்தத்தை எட்டியுள்ள ரோயல் கிங்ஸ் நிறுவனமானது இன்று பல நாடுகளிலும் தனது கிளைகளை நிறுவி பயணிக்கின்றது. இந்த முன்னேற்றங்களுக்குப் பின்னால் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?**

தொழில் முயற்சியை ஆரம்பிக்கும் போது பல்வேறு சிரமங்கள் இருந்தன. ஆனாலும், எங்களுக்கென்றிருந்த மிகப் பெரும் சவால் எதுவென்றால் "கோவிட்" நிலைமைதான். "கோவிட்" இன் பின்னர் உலகளவில் பல நாடுகளும் பெருமளவோ, சிறிதளவோ பொருளாதார நெருக்கடிகளை சந்தித்தன. அந்த சந்தர்ப்பத்தில் எவ்வித வர்த்தகங்களும் இடம்பெறாமல் முடங்கியிருந்தும், கம்பனிகளுக்கான அடிப்படை செலவீனங்கள், ஊழியர்களின் சம்பளங்கள் போன்றவற்றை வழங்கிக் கொண்டிருந்தோம்.

அந்த சந்தர்ப்பத்தில் நிலைமையை கருத்திற்கொண்டு ஒரு சில இடங்களிலுள்ள கிளைகளை மூடிவிட்டு எமது

எங்களுக்கு இலங்கை பெறுமதியில் சுமார் 5 கோடி ரூபா செலவாகியது.

**"கோவிட்" காலங்களில் பல நிறுவனங்கள் நஷ்டம் எனும் அடிப்படையில் நிறைய தொழிலாளர்களை இடைநிறுத்தியிருந்தது. ஆனால், நீங்கள் இவ்வாறு செய்தமை பெருமிதமானது. இவ்வாறு நீங்கள் செயற்பட காரணம் என்ன?**

உண்மையில், ஒரு நிறுவனத்தினுடைய வளர்ச்சியின் முக்கிய பங்காளர்கள் அதன் ஊழியர்கள் தான். அவர்களை நாம் எப்போதும் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களை திடீரென தொழிலை விட்டு நீக்கி நடுத்தெருவுக்கு ஆக்கினோம் என்றால், அவை எமது எதிர்காலத்திற்கு பெரும் பாவமாக அமைந்துவிடும்.

அது மாத்திரமன்றி, எமது நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பட்ட, அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களை இழப்போமானால் அவை பெரும் ஆபத்தை எமது தொழிலில் ஏற்படுத்திவிடும். எனவே, இலாப நஷ்டங்களுக்கு அப்பால் மனிதநேயமிக்க ஒரு நிர்வாகியாக திகழ வேண்டும் என்பதே எனது அவாவும் கூட.

**உங்களது இந்தளவு முன்னேற்றத்தின் இரகசியம் என்ன?**

எமது தொழில் வெற்றியின் இரகசியம் என்று சொல்லப்போனால் "நேர்மை" ஒன்றுதான். நேர்மை என்பது வெறும் சாதாரண வார்த்தையல்ல. அதற்குள் பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. எந்தத் தொழிலையம் நேசித்து செய்வதன் மூலமும், வாடிக்கையாளர்களுக்கு தரமானவற்றை வழங்குவதன் மூலமும், நன்மதிப்பை எப்போதும் தக்க வைத்துக் கொள்ளலாம். அத்துடன், நிறுவனங்களில் நம்பிக்கை, உண்மை, மற்றும் விசுவாசமாக செயற்படுவதன் மூலம் உச்ச அடைவை எட்டலாம். பொதுவாக சொன்னால், இவைதான் எனது வெற்றியின் இரகசியம் எனலாம்.

**தொழிலதிபராக இருப்பது மட்டுமன்றி சமூக சேவையாளராகவும் திகழும் நீங்கள், உங்களது சமூக சேவைகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்கின்றீர்கள்?**

எனது சொந்த ஊர் இந்தியாவின் கூத்தான் நல்லூர் ஆகும். இங்குள்ள சிலர் சிங்கப்பூரில் வசிக்கின்றனர். எனது தனிப்பட்ட உதவிகளை மறைமுகமாக செய்கின்ற அதே சமயம், நீண்ட காலமாக இயங்கி வரும் கூத்தான் நல்லூர் சமூக சேவை நிறுவனத்தினால் பல சேவைகளையும் மக்களுக்கு இலவசமாக செய்து வருகின்றோம்.



நேர்காணல்:
**கியாஸ் ஏ. புஹாரி**

**படங்கள்: எம்.எம். ஜெஸ்மின்**

## உலமாக்களின்...

(முதலாம் பக்கத் தொடரச்சி)

வாழுகின்ற நமது உலமாக்களுடைய வரலாற்றுப் பங்களிப்புக்கள், நம்மால் கண்டிப்பாக கௌரவிக்கப்பட்டு பாராட்டப்பட வேண்டும்.

அந்த வகையில், கம்பஹா மாவட்டத்தின் ஜம் இய்யத்துல் உலமா, இந்த உயர் மனிதப் பண்பை புரிந்து கொண்டு, இஸ்லாமிய வழி முறையைத் தயார் படுத்தியுள்ளது மாத்திரமல்லாமல், மூத்த ஆலிம்கள் கௌரவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருப்தையும் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு, அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் செயற்குழு உறுப்பினரும், பேருவளை ஜாமிஆ நழீமிய்யாவின் முதல்வருமான அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் புகழாரம் சூட்டினார்.

கம்பஹா மாவட்ட ஜம் இய்யத்துல் உலமாவினால், மாவட்டத்தின் 56 மூத்த ஆலிம்கள், வத்தளை – ஹுணுப்பிட்டிய, ஹெவன்"ஸ் கேட் பென்கட் ஹோல் ( Heaven's Gate Banquet Hall ) வரவேற்பு மண்டபத்தில், (23) வியாழக்கிழமை கௌரவிக்கப்பட்டு பாராட்டப்பட்டனர்.

கம்பஹா மாவட்டத்தில் இயங்கும் மினுவாங்கொடை, நீர்கொழும்பு, திஹாரிய, கஹட்டோவிட்ட, பஸ்யாலை, மல்வானை, பூகொடை, வத்தளை ஆகிய எட்டு கிளைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 56 மூத்த ஆலிம்களே, இம்மாபெரும் சிறப்பு நிகழ்வில் இவ்வாறு கௌரவிக்கப்பட்டு பாராட்டப்பட்டனர்.

இச்சிறப்பு நிகழ்வில், பிரதம விசேட பேச்சாளராகக் கலந்து கொண்டு, அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது குறிப்பிட்டதாவது,

பாராட்டப்பட வேண்டியவர்களை பாராட்ட வேண்டிய அளவுக்கு பாராட்டுவது என்பது, ஒரு உயர்ந்த மனிதப் பண்பு. இஸ்லாம் வலியுறுத்துகின்ற ஒரு உயர்ந்த குணம். அது மாத்திரமல்ல, மனம் விட்டுப் பாராட்டுவது இஸ்லாத்தின் தூய்மையான வெளிப்பாடு. இவை அனைத்துக்கும் மேலாக, கௌரவிக்கப்பட வேண்டியவர்களை கௌரவிப்பது என்பதும், பாராட்டப்பட்ட வேண்டியவர்களை பாராட்டுவது என்பதும், ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களின் ஒரு சுன்னத்தான நபி வழி. அந்த வகையில், ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சுன்னாவை வேரூன்றச் செய்யும் வகையில், கம்பஹா மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருக்கின்றமை எல்லா வகையிலும் பாராட்டப்பட்ட வேண்டியது.

ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் நிறைய ஸஹாபாத் தோழர்களைத் தட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். மெச்சி இருக்கின்றார்கள், பாராட்டி இருக்கின்றார்கள், புகழ்ந்து பேசி இருக்கின்றார்கள். ஹழ்ரத் அபூபக்கர் (ரழி), ஹழ்ரத் உமர் (ரழி), ஹழ்ரத் உஸ்மான் (ரழி), ஹழ்ரத் அலி (ரழி) ஆகியோர்கள் உள்ளிட்ட மேலும் பல அதிகமான ஸஹாபாத் தோழர்களையும் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மனம் விட்டுப் பாராட்டிப் புகழ்ந்து பேசி இருக்கின்றார்கள் என்பது மாத்திரமல்ல, உற்சாகப்படுத்தியும் இருக்கின்றார்கள். இதனை நாம் ஹதீஸ் கிரந்தங்கள் வாயிலாக அறிகின்றோம்.

தொழில், சம்பளம், நியமனம், பதவி உயர்வு என்று எதுவுமே இல்லாமல், அல்லாஹ்த் தஆலாவுக்காக காலாகாலமாக இயங்கி வருகின்ற ஒரு உன்னதமான சமூகம் தான், உலமாக்கள் சமூகம். ஆனால், அவர்களுடைய சகல பணிகளையும் இஸ்லாமிய தொடர்பு அறுபடாமல், விடுபடாமல், ஆரவாரம் இல்லாமல், அலட்டிக்கொள்ளாமல் கடமை கண்ணியம் பேணி, மிகவும் பொறுமையுடனும் பொறுப்புடனும் செய்து வருகின்றார்கள். இதனால்தான், உலமாக்கள் என்றும் எவ்விடத்திலும் கட்டாயம் கண்டிப்பாக கௌரவிக்கப்பட வேண்டியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள். அந்த வகையில், கம்பஹா மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா, இவ்வாறான மாபெரும் ஒரு கண்ணியமான சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்காக மீண்டும் ஒருமுறை எனது பாராட்டையும் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டர்.

## திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களால் தௌபீக் எம்.பிக்கு கௌரவம்



திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன (ATI) மாணவர் ஒன்றியத்தினால் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன பணிப்பாளர் ஏ.கே கோகிலன், விரிவுரையாளர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

அண்மையில் திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ATI) HND ஐவு கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டுள்ளதை மாணவர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து உரியதரப்பினருடன் பேசி அதற்கான தீர்வை பாராளுமன்ற உறுப்பினர் பெற்றுக்கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

## MAYBE THEY WON'T நாவல் வெளியீடு

"MAYBE THEY WON'T" என்கின்ற ஆங்கில நாவல் எதிர்வரும் 28-06-2024 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் கொழும்பு BMICH தியூலிப் மண்டபத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

சுயாதீன ஊடகவியலாளர் ஏ.ஆர். வி.லோஷன் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முஸ்லீம் மீடியா போரத்தின் தலைவர் என். எம்.அமீன், மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாறுக் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்

இந்நாவலுக்கான பிரதான மீளாய்வு உரையினை கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபர் சட்டத்தரணி றிஸ்வி மரைக்கார் அவர்களும் நூல் மதிப்பீட்டினை புத்தளம் வலயக் கல்விப்பணிமனையின் ஆங்கில ஆசிரிய ஆலோசகர் திருமதி பாத்திமா ரிஸ்கியா அவர்களும்,



ஊடகவியலார் அப்துல் ரஸ்ஸாக் உடையார் அவர்களும் நிகழ்த்தவுள்ளனர்.

பதின்மவயது இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் நிலவுகின்ற உறவுகள், அதனடியாக எழுகின்ற உணர்வலைகள், எண்ணங்கள், பார்வைகள், முரண்பாடுகள் அவற்றைப் பெற்றோரும் சமூகமும் அர்த்தப்படுத்தும் முறைமைகள் என இதுவரை பேசுபொருளாக அல்லாத ஆனால் நமது சமூகத்தில் உறைந்துகிடக்கின்ற ஒரு கருவை மையமாகக்கொண்டு புனையப்பட்ட இந்த நாவலின் முதலாவது பதிப்பின் வெளியீடே அன்றையதினம் இடம்பெறவுள்ளது

மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி மாணவனும், அண்மையில் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவருமான செல்வன் அப்துல்லாஹ் அஸ்மின் மேற்படி நாவலைப் புனைந்திருக்கின்றார்.

முன்னாள் விமானப்படை அதிகாரி முஹம்மது ஷபா அவர்கள் தலைமையில் இடம்பெறவிருக்கின்ற இந்நிகழ்வில் எழுத்தாளர் செல்வன் அப்துல்லாஹ் அவர்களின் ஆசிரியர்கள், மற்றும் அவரது முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் கௌரவிக்கப்படவிருக்கின்றார்கள்.

# சிறந்த ஆளுமைகளை உருவாக்கிய எல்லலமுல்ல இப்னு உஸைமீன் அரபுக் கல்லூரி







பஸ்யால எல்லலமுல்லையில் இயங்கி வரும் இப்னு உஸைமீன் மகளிர் அரபிக் கல்லூரியானது 2012 /03/03 அன்று45 மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

நான்கு வருட பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் இக்கல்லூரியானது க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளை உள்வாங்கி அவர்களுக்கான இஸ்லாமிய ஷரியா கல்வியுடன் கலைத்துறையில் உயர்தர பரீட்சைக்கான பாடத்திட்டங்களையும் போதித்து வருகிறது.

அத்தோடு மேலதிகமாக இங்கே பெண்களுக்கு தேவையான தையல் கலை, சமையல் கலை, அதே போன்று ஜஊவு, சிங்களம் ஆங்கிலம் ஆகிய மேலதிக பாடத்திட்டங்களும் உள்ளடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் இதுவரை சுமார் 200 ஆலிமாக்கள் வெளியாகி உள்ளனர்.

இவர்களில் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று தொழில் வாய்ப்புகளை பெற்றவர்களும் மேலும் பிரச்சாரத் துறையில் ஈடுபடக் கூடியவர்களும் உள்ளடங்குவர்.

இக்கல்லூரி மாணவிகளுக்கு பாதுகாப்பான சூழலில் அமைந்துள்ளதும் மேலும் இக்கல்லூரியில் பட்டம் பெற்று வெளியாகிய ஆலிமாக்கள் ஆசிரியைகளாக கடமையாற்றுவதோடு

இக்கல்லூரியின் ஸ்தாபகர்களான

அஷ்ஷேக் முஸ்தபா ஜவாத் (மதனி) அஷ்ஷேக் அஸ்வர் ஹனீபா (ரியாதி) அஷ்ஷேக் நஜ்முல்/ஹஸைன் (அப்பாசி)

ஆகியோர் நிர்வாகிகளாகவும் ஆசிரியர்களாகவும் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது

அத்தோடு அஷ்ஷேக் ரமீஸ் (ரியாதி)

அஷ்ஷேக் ஜமால் (மதனி) ஆகியோரும் இங்கு விரிவுரையாளர்களாக கடமையாற்றுகின்றார்கள் .

மேலும் இக்கல்லூரி யானது எந்த நேரத்திலும் வந்து செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகளை கொண்ட பாதையில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விண்ணப்ப படிவம் : https://forms.gle/sMF5QDDACCGfnPZd9




# கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் இன ஐக்கியத்திற்கான முன்மாதிரியான செயற்பாடு





(எம்.எம். ஜெஸ்மின்)

பௌத்தர்களின் வெசாக் பண்டிகையை முன்னிட்டு கஹட்டகஸ்திகிலிய, துறுக்குராகம பிரதேசத்திலுள்ள முஸ்லீம்கள் வெசாக் பண்டிகையையொட்டி வீதியில் செல்வோருக்கு தன்சல வழங்கி கௌரவித்தனர். இந்த நிகழ்வு இன நல்லுறவுக்கு வித்தியாசமான பாலமாக அமைந்துள்ளதாக அனைவரும் பாராட்டியுள்ளனர்.

## ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவன் தேசிய மாணவச் சிப்பாய் படையணியில் பதவி உயர்வு



(எஸ். அஷ்ரப்கான்)

பாதுகாப்பு மற்றும் கல்வி அமைச்சு இணைந்து பாடசாலை மட்டத்தில் சிறந்த ஒழுக்கமுள்ள ஆளுமையான தலைவர்களை உருவாக்கும் நோக்கில் உருவான பாடசாலையின் தேசிய மாணவச் சிப்பாய் படையணியில் ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய பாடசாலையின் தேசிய மாணவச் சிப்பாய் படையணியைச் சேர்ந்த மாணவன் ஏ.என்.ஸராபத் இஸ்னி, பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக சார்ஜன்ட் நிலையில் இருந்து பதவியுயர்வு பெற்று (CQMS) (Company Quarter Master Sergeant) நிலைக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பாடசாலையின் இணைப்பாடவிதான அபிவிருத்திச் செயற்பாடுகளின் மற்றுமோர் மைல்கல்லாக இச்சாதனை குறித்த பாடசாலைக்கு கிட்டியுள்ளது.

இம்மாணவனுக்கான பதவியுயர்வு வழங்கும் நிகழ்வு அம்பாறை 17 ஆவது படைப்பிரிவில் கடந்த 16/05/2024 அன்று கட்டளையிடும் அதிகாரியின் தலைமையில் நடைபெற்றது.

இம்மாணவனை ஊக்குவித்த, பல்வேறு வழிகாட்டல்களை வழங்கிய பாடசாலை அதிபர் அஷ் ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம் மற்றும் ஆலோசனை வழங்கிய இணைப்பாடவிதானத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன், உடற்கல்வி பாட சிரேஷ்ட ஆசிரியர் பாடசாலை பொலிஸ் கெடற் பிரிவின் பொறுப்பாசிரியர் பிளட்டூன் கொமாண்டர் (PLATOON COMMANDER) லெப்டினன்ட் ஏ.எம்.எம். கியாஸ், மேலும் இம்மாணவனுக்கு தொடர் பயிற்சியினை வழங்கிய நிந்தவூர் பொலிஸ் நிலைய பொலிஸ் கெடற் பயிற்றுவிப்பாளர் எம். சுதர்சன் (PC-84941), பாடசாலையின் கெடற் பிரிவுக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்புகளை வழங்கும் உடற்கல்வி ஆசிரியர் ஆர்.நௌஸாத், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ. அஸ்மத் ஸஹி ஆகியோருக்கு பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளது.



இலங்கைக்கான ஈரான் தூதுவர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள இரங்கல் புத்தகத்தில் ஈரான் ஜனாதிபதி மர்ஹூம் இப்றாஹிம் ரைஸிக்கான இரங்கல் புத்தகத்தில் தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா கையெழுத்திட்ட போது...

## சிறந்த வளர்ந்து வரும் கல்வி நிறுவனமாக அமேசன் கல்வி நிறுவனம் தெரிவு!



2023 ஆண்டுக்கான சிறந்த வளர்ந்து வரும் கல்வி நிறுவனமான அமேசன் கல்வி நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

BWIO USA ஏற்பாடு செய்த சர்வதேச விருது விழாவில் இந்த விருது அமேசன் உயர் கல்வி (AMAZON COLLEGE & AMAZON CAMPUS) நிறுவனத்திற்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக துறையில் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்து நுகர்வோருக்கு சிறந்த சேவையாற்றிய நிறுவனங்களை கௌரவிக்கும் முகமாக Business World International Organization, USA (BWIO) நிறுவனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டு விருதுகள் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்துக்கான விருதினை அமேசன் உயர் கல்வி (AMAZON COLLEGE & AMAZON CAMPUS) நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் பெற்றுக்கொண்டார். விருதினை பெற்றுக்கொண்ட அவர் அது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

அயராத முயட்சியும் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக எமது நிறுவனம் வழங்கி வந்த தரமான சேவையே எம்மை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது.

இந்த விருதும் கௌரவமும் எமக்கு மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் தந்துள்ளது. எமது இந்த வெற்றிக்கும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் பக்கபலமாக இருந்த நிறுவனத்தின் சகல ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.







நாச்சியாதீவு பர்வீன்

# காத்திருத்தல்...



– ரீனா மயன்கார் –

கணவன் மனைவி இருவரும் ...

ஒரு ஹோட்டலில் ஐஸ்கிரீம் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

என்னங்க... உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கணும்போல இருக்கு கேட்கவா....

இதென்ன புதுசா .. என்கிட்ட கேட்டா என்கிட்ட பேசுவ.... கேளு என சிரித்தான் கணவன்..

இல்ல, ஒரு மாசமா சீக்கிரம் வீட்டுக்கு வாரீங்க... அடிக்கடி வெளிய கூட்டிப்போறீங்க பொண்ணு கூட உட்கார்ந்து பாடம் சொல்லி குடுக்றீங்க.....

திடீரென எங்க மேல நெருக்கமா மாறீட்டீங்க.... அதான்...என்று இழுத்தாள்.

ஒண்ணுமில்லையே எப்பவும் போலத்தான் இருக்கேன்.

மறைக்காதீங்க ... உங்க முகரைய பார்த்தாலே தெரியுது... சொல்லுங்க

ஏனிந்த மாற்றம்...

என்னத்த சொல்ல..

ஏதும் சின்னவீடு செட்பண்ணிட்டிங்களா...அத மறைக்கத்தான் இப்படி கொஞ்சுறிங்களா எங்ககூட?

போடி லூசு.. அவன் சிரித்தான்.

ஆனால், அதில் உயிரில்லை.

மெதுவாய் சொன்னான்..

நீயா கேட்பே சொல்லணும்னுதான் இருந்தேன் என கொஞ்சம் சீரியஸ் ஆனான்.

என்னங்க ஏதும் பிரச்சினையா படபடத்தாள்....

அவன் இல்லையென தலையாட்டிய படியே...

அவனது அலுவலக பையை திறந்தான்.

ஒரு டைரியை திறந்து ஒரு பேப்பரை எடுத்து நீட்டினான்.

என்னங்க இது .. படி என சொல்லிவிட்டு பின்னால் நகர்ந்து அமர்ந்தான்.

அவள் படிக்க தொடங்கினாள் ...

அவன் கண்கள் கண்ணீரை சிந்த ஆரம்பித்தது...

அன்புள்ள மகனுக்கு,

கண்டிப்பா என்றைக்காச்சும் இந்த கடிதம் உன் கையில கிடைக்கும்னு நான் நம்புறேன்.

உங்கப்பாவுக்கு மனைவியா உனக்கு அம்மாவ இந்த கடிதம் எழுதுறேன்.

ரொம்ப பெரிய கடிதம் பொறுமையா படி.

அவசரமா வேலை இருக்குனு பாதி படிச்சி மீதிய இன்னொரு நாள் காத்திருந்துப் படிக்காத.

உங்கப்பாவ நான் கல்யாணம் பண்ணும்போது நான் காலேஜ் லெக்சரர்.

அப்புறம் நீ வந்த பிறகு உங்கப்பாக்கு அதிர்ஷ்டம் அடிச்சுது.

இன்னும் கன்ஸ்ட்ரக்ஷன்ல வளர்ந்தாரு.

அப்புறம் உன் தங்கச்சி பிறந்தா ...

நான் வேலையை விட்டுட்டு வீட்டோட உங்கள கவனிச்சுட்டு இருந்தேன்.

உனக்கு தான் தெரியுமே அப்பா எப்படி பிசின்னு...

கல்யாணம் ஆன ஒரு வருஷம் தான் கனவு வாழ்க்கை.

அப்புறம் எல்லாமே காத்திருந்த வாழ்க்கைதான்.

உங்கப்பாவுக்கு காத்திட்டு இருந்தேன்.

அவர், அவர் உருவாக்க நினைச்ச ஆடம்பர வாழ்க்கைக்காக உழைச்சிட்டு இருந்தார்.

நீங்கள் ரெண்டு பேரும் தான் எனக்கு துணை.

நாம தான் விளையாடுவோம்.

அப்புறம் நீங்க ஸ்கூலுக்கு போய்ட்டீங்க.. நீங்க வரதுக்கு காத்திட்டுருப்பேன்.

ஸ்கூல்விட்டு வந்ததும் கதைகதையா சொல்லுவீங்க..

அதுல பாதி பொய் இருக்கும்..

அதெல்லாம் உங்க கற்பனைன்னு நினைச்சு ரசிச்சேன்.

அப்புறம் நீங்க வளர்ந்தீங்க..

அம்மாட்ட சொல்ல ஏதுமில்லாம போச்சு.

ஆனா உங்கள்ட்ட இருந்து ஆர்டர் மட்டும் வந்துச்சு.

இப்ப வெளியே போகணும்...

இப்படி வெளியே போகணும்னு..

ஆனா வர்ற டைம் கேட்க முடியுமா அம்மாவால்.......

காத்திட்டு இருப்பேன்.

நீங்க சாப்டு வரீங்களா.... சாப்டாம வாரீங்களாணு தெரியாம  காத்திட்டு இருப்பேன்....

நீங்க எக்ஸ்டரா கோச்சிங், பிரண்ட்ஸ் அரட்டைனு..பிசி

இடையில உங்கப்பா உடம்பு முடியாம படுத்துட்டாரு.

அவருக்கு டயத்துக்கு மாத்திரை கொடுக்கனும், மருந்து கொடுக்கணும், பிசியோதெரபி பண்ணனும் காத்திட்டுருப்பேன்.

காத்திட்டு இருக்கிறதே என்னோட வாழ்க்கை ஆகிடுச்சு பாத்தியா?

அப்புறம் உன தங்கச்சி கல்யாணம்...

இப்ப அவ எப்படி இருக்கானு கூட

அவளா முடிவு செய்ற நேரத்திலதான் என் கூட பேச முடியும்....

ஏன்னா அங்க அவ காத்திட்டு இருக்கா .... ஒரு அம்மாவா...

உனக்கு சொல்லவே வேண்டாம்...

அப்பாட தொழில எடுத்து நீ செய்ய ஆரம்பிச்ச உடனே

நீயும் ரெம்ப பிசியாகிட்ட..

நீ கடைசி ஐஞ்சு வருஷத்தில் அம்மாட்ட பேசுனத கொஞ்சம் யோசியேன்...

சாப்டிங்களா, மாத்திர போட்டாச்சா.. ஊசிபோட்டாச்சா... இவ்ளோதான்.

உங்கப்பா வாழ்ற காலத்தில பிசியா இருந்தாரு..

நான் காத்திட்டு இருந்தேன்.

கடைசி காலத்தில் ஏதுவும் இல்லாம இருந்தாரு..

ஆனா மாத்திரைக்கு காத்திட்டு இருந்தாரு...

என்கிட்ட பேச அவருக்கு விசயமே இல்லை...

பேப்பர் படிச்சாரு. புக் படிச்சாரு. தூங்குனாரு.

ஏன்னா பேச வேண்டிய காலத்தில் பேசல...

பேச நேரமிருந்த காலத்தில் பேச விஷயமில்லை... அனுபவமும் இல்லை.

இப்படித்தான் பெரும்பாலான அம்மாக்களோடு வாழ்க்கை முடிஞ்சு போகுது.

நாம என்னைக்காச்சும் வெளியே போகும் போது, அங்க நிறைய அம்மாக்கள பார்ப்பேன்..

அவங்க எல்லார் கண்ணிலும் எனக்கு தெரியுறது காத்திருந்த ஏக்கம் மட்டும் தான்.

உன்னை மாதிரி பசங்க கூட்டிட்டு வர அவங்க மனைவிகளை பார்ப்பேன்...

அதுல இன்னைகே வாழ்ந்துடணும்...

அடுத்த ஆறு நாள் இவன் கூட பேசக்கூட முடியாதுன்ற ஒரு ஏக்கம் இருக்கிறத பார்த்தேன்.

இன்னைக்கு ஒரு நாள் தானேன்னு புள்ளைக கேட்ட எல்லாம் செய்ற அப்பாக்கள பார்த்தேன்.

இது கொஞ்சம் கொஞ்சமா அவங்களுக்கான காரியம் சாதிக்கிற நாள் ஆகிடுச்சுன்னுது புரிந்தது...

உங்களுக்கு ஒரு நாள் தானேன்னு ஒரு நினைப்பு வந்துடுச்சு.

இதெல்லாம் ஏன் இப்ப சொல்றேணு யோசிக்கிறியா...

என் காலத்தில் இதெல்லாம் உங்கப்பாட்ட சொல்லி புரிய வைக்க முடியல..

ஆனா நீ அடுத்த ஜெனரேஷன்.. கொஞ்சம் யோசிப்பாய் தானே

அதான் உன்கிட்ட சொல்றேன்.

நான் உயிரோடு இருக்கும் போது சொல்ல முடியல...

சொன்னாலும் உன்னால கேட்க முடியாது..

அதனால தான் இப்ப சொல்றேன்.

உனக்கு வீட்ல ஒரு பொண்ணு இருக்கா, மனைவி இருக்கா...

காத்திட்டு இருக்காங்க...

உன் தங்கச்சிக்கு உங்கப்பா மேல இருந்த பாசம் உனக்கு தெரியாது..

ஆனால் அத அவ வெளிக்காட்டும் போது உங்கப்பா கட்டில்ல நகர முடியாம இருந்தாரு.

அவரு தான் அப்பானு அவ காலேஜ்க்கு ஸ்கூலுக்கு தெரியாத அளவுக்கு அவர் பிசி....

அப்பா கூட அங்க போகணும் இங்க போகணும்ங்கிற அவள்ட எந்த ஆசையும் நிறைவேறல..

அவ அப்பா கடைசி காலத்தில சும்மா இருந்தபோது அவர் பேசுவது அவளால கேட்க முடியல

ஏன்னா அவ வேறு வீட்டுக்கு போய்ட்டா ..

பாத்தியா வாழ்க்கைய ?

நீ உன் பொண்ணுக்கு அப்படி ஒரு வாழ்க்கைய கொடுத்துடாத

உன் மனைவிய அவளோட மகனுக்கு கடிதம் எழுத வச்சிடாத...

இன்னைக்கு மூணுவேளை சாப்பிட சம்பாதிச்சுட்ட.

நாளைக்கு மூணு வேளைக்கும் உனக்கு பிரச்சினை இல்லை.

இன்னும் சொல்லபோனா

நீ இப்ப உழைக்கிறது உன்னோட அடுத்த பத்துவருஷம் கழிச்சி செலவழிக்க போறதுக்குதான்..

அத கொஞ்சம் குறைச்சிக்கோ..

சீக்கிரம் வீட்டுக்கு வா.

பொண்டாட்டிகிட்ட புள்ளைககிட்ட பேசு...

அவங்களுக்கும் நீ நல்லா இருக்கும் போதே கொஞ்சம் நேரம் கொடு....

ஏன்னா அன்புக்காக காத்திட்டு இருக்கிறதும்...

ஒருத்தர காக்க வைக்கிறதும் ஒரு வாழ்க்கையா?

செய்வேன்னு நம்புறேன். ஏன்னா என்கிட்ட நல்லா பேசின பையன் தானே நீ...

உன் மனைவி மகள விட்டுடவா போற...

கடிதத்தை படித்து முடிந்தாள்.

அவள் முகம் ஒருவித பரபரப்பில் இருந்தது.

நிமிர்ந்து அவனை பார்த்தாள்....

இரண்டு மிகப்பெரிய பலூடா ஐஸ்கீரிம் வந்திருந்தது.

அவள் மெதுவாய் தன் அலைபேசியில் இருந்து அவள் அம்மாவிற்கு போன் செய்தாள்.....

நான் தான்மா.....

ஏன் சும்மா பேசக்கூடாதா?....

என்ன செய்ற...

அப்பா என்ன செய்றாரு... என பேசத்தொடங்கினாள்.

ஐஸ்கீரிம் கொஞ்சம் கொஞ்சமாய் உருகத்தொடங்கியது.... .

அவன் சிரித்தபடி சாப்பிட தொடங்கினான்.

இனிமே அப்படித்தான்..

இனி அங்கே அன்புக்காக காத்திருக்க அவசியமில்லை....

# கம்பஹா மாவட்ட மூத்த ஆலிம்கள் கௌரவிப்பு





























(ஐ. ஏ. காதிர் கான்)

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா – கம்பஹா மாவட்ட மூத்த ஆலிம்களை கௌரவித்தல் நிகழ்வு, வத்தளை – ஹுணுப்பிட்டிய, ஹெவன் கேட் பென்கட் ஹோல் (Heaven's Gate Banquet Hall ) வரவேற்பு மண்டபத்தில், (23) வியாழனன்று வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கம்பஹா மாவட்டத்தில் இயங்கும் மினுவாங்கொடை, நீர்கொழும்பு, திஹாரிய, கஹட்டோவிட்ட, பஸ்யாலை, மல்வானை, பூகொடை, வத்தளை ஆகிய எட்டு கிளைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த ஆலிம்கள் 56 பேர், இம்மாபெரும் சிறப்பு நிகழ்வில் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மூத்த உலமாக்கள் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்ட இப்பொன்னான சிறப்பு நிகழ்வை, கம்பஹா மாவட்ட அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா ஒழுங்கு செய்திருந்தது. கம்பஹா மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் நுஹ்மான் இன்ஆமி, செயலாளர் அஷ்ஷெய்க் ஸைபுல்லாஹ் இஹ்ஸானி, பொருளாளர் அஷ்ஷெய்க் ஷாபி ஹுஸைன் நழீமி ஆகியோர் உள்ளிட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர்களின் அயராத பாரிய உழைப்பின் ஒரு பணியாக இம்மாபெரும் மூத்த ஆலிம்களுக்கான சிறப்பு கௌரவ நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஜம்இய்யாவின் உப தலைவர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் எம்.ஜே. அப்துல் ஹாலிக் பிரதம அதிதியாகவும், உப தலைவர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். றிழா விசேட அதிதியாகவும் இதில் பங்கேற்றிருந்தனர்.

ஜம் இய்யாவின் செயற்குழு உறுப்பினரும், பேருவளை ஜாமிஆ நழீமிய்யாவின் முதல்வருமான அஷ்ஷெய்க் அகார் மொஹமத், பிரதம விசேட பேச்சாளராகக் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

கௌரவ அதிதிகளாக , அஷ்ஷெய்க் எம். ரீ.எம். தௌஸீர், அல்ஹாஜ் மொஹமத் பாயிஸ் ஆப்தீன், அல்ஹாஜ் எம்.எச்.இஸட்.எம். மர்சூக், அல்ஹாஜ் எல்.ஐ.ஏ.எம். ஸப்வான், அல்ஹாஜ் அஹமட் இஸ்மாயீல் மொஹமத் அஷ்கர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் பல மூத்த ஆலிம்களும், இளம் ஆலிம்களும் இம்மாபெரும் பொன்னான நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.



# பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடாத்தும் கொடூர செயலில் அமெரிக்காவின் பங்கு என்ன?


எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

பல ஆண்டுகளாக அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக இஸ்ரேல் இருப்பது சர்வதேச நாடுகள் அனைத்தும் அறிந்து உண்மை என்பதில் எந்த.

அதிலும் காஸா மீது இஸ்ரேல் அரசு இனப்படுகொலையை நிகழ்த்தும்போது அமெரிக்கா அதற்கு பக்கபலமாக நின்று எந்த அளவுக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கிறது என்பதை நாம் பார்த்து வருகிறோம். 1948ல் இஸ்ரேல் எனும் நாடு உருவான சமயம் முதலாக இரண்டு நாடுகளுக்கும் மத்தியில் மிக பலமான உறவு இருந்துவருகிறது. இந்த உறவு வலுவாக இருப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பில் இருந்த பாலஸ்தீனில் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. அப்போது 7 லட்சத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் தம் வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். முதல் நாடாக இஸ்ரேலை அங்கீகரித்த நாடு அமெரிக்கா. அப்போது அதிபராக ட்ரூமன் இஸ்ரேல் உருவான 11 நிமிடங்களில் அதை அங்கீகரித்தார்.

1800களில் யூதர்களுக்கென்று ஒரு தேசத்தை உருவாக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு ஸ ிியோனிச இயக்கம் உருவாக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக அடக்குமுறைக்கு உள்ளாகிவரும் யூதர்களுக்கான தீர்வு தனி நாடு அமைப்பதுதான் என்று அவர்கள் முழங்கினார்கள். யூத இனப்படுகொலை ஐரோப்பாவில் நடந்திருந்த பின்னணியில், ஸியோனிஸ்டுகளின் தேச உருவாக்கத் திட்டத்துக்கு 1930, 1940களில் பெரும் அனுதாபம் இருந்தது. அமெரிக்கா இஸ்ரேலை ஆதரிக்க இதுவொரு காரணம் இந்த நிலையில் அமெரிக்கா அதிபர் ஹாரி ட்ரூமன் இஸ்ரேல் உருவாக அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று வாக்குறுதி கொடுத்தார். அன்றிலிருந்து இன்றுவரை அமெரிக்க-இஸ்ரேல் நட்பு தொடர்கிறது.

அதே சமயம் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஜனநாயகம், மதச்சார்பின்மை மாதிரியான மதிப்பீடுகளை, விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் பரஸ்பரம் ஒத்துப்போவதாக அமெரிக்க அரசியல்வாதிகள் தொடங்கி அதிபர்கள்வரை சொல்லி வருகிறார்கள். மத்தியக் கிழக்கிலுள்ள ஒரு ஜனநாயக நாடு இஸ்ரேல் என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ரம்ப் போன்ற பலர் சொல்லியிருக்கிறார்கள். அதேசமயம், இஸ்ரேல் இன வேற்றுமை அரசாக (apartheid state) இருப்பதைப் பற்றியெல்லாம் அமெரிக்கா வாய்திறக்காது என்பதை நமக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்ல

அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்களின் நலன்களுக்குப் பரஸ்பரம் உதவிக்கொள்வதன் மூலமே அவர்களுக்கு மத்தியிலான உறவும் பந்தமும் பலமாக உள்ளது. குறிப்பாக அரபுகள் மத்தியில் தமக்கு ஒரு நம்பகமான கூட்டாளி தேவை என்பதை அமெரிக்கா நன்கு உணர்ந்து உள்ளதே இந்த உறவின் அடிப்படையிலான காரணமாக அமைந்து உள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிகப்பெரும் தொகையை இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கியிருக்கிறது. இந்த அளவுக்கு வேறு யாருக்கும் அந்த நாடு நிதி வழங்குவதில்லை. 1946ல் இருந்து 2023 வரை 260 பில்லியன் டாலர்களை வழங்கியிருக்கிறது (Source: Congressional Research Service). 2008 வரை பொருளாதார உதவியும், ராணுவ உதவியும் வழங்கி வந்த அமெரிக்கா இப்போது ராணுவ உதவி மட்டும் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஆண்டுக்கு 3.8 பில்லியன் டாலர்களை இஸ்ரேல் அமெரிக்காவிடமிருந்து பெறுகிறது. வேறு வார்த்தையில் சொல்வதானால் அமெரிக்க குடிமக்களின் வரிப் பணத்தில் இஸ்ரேல் ராஜ வாழ்க்கை வாழ்கிறது. ராணுவ பலத்தையும் பன்மடங்கு பெருக்கியிருக்கிறது. இந்த அடிப்படையில் தான் இஸ்ரேலிய அரசு போர் விமானங்கள் முதல் வான் பாதுகாப்பு சாதனமான Iron Dome defence system வரை அமெரிக்கா வழங்கியதுதான். அமெரிக்கா வழங்கும் நிதியைக் கொண்டு அமெரிக்க ஆயுத நிறுவனங்களிடமிருந்து இஸ்ரேல் இவற்றைப் பெற்றுக்கொள்கிறது. ஆயுதத் தளவாடங்ககளைப் பிரயோகிப்பது தொடர்பாக எந்த நிபந்தனையையும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா விதிக்கவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த வாரம் வெளியான பைடனின் தொலைக்காட்சி நேர்காணலுக்கு முன்னதாக, இஸ்ரேலுக்கு செல்ல வேண்டிய ஒரு ஆயுதக் கப்பலை நிறுத்தி வைத்தது அமெரிக்கா. அதில் இஸ்ரேலுக்கு அனுப்ப வேண்டிய 2,000-பவுண்டு மற்றும் 500-பவுண்டு வெடிகுண்டுகள் இருந்தன. அதிக சக்திவாய்ந்த ஆயுதங்களை மக்கள் நெருக்கமாக வாழும் நகர அமைப்புகளின் மீது பயன்படுத்தும்போது, காஸாவின் பிற பகுதிகளில் ஏற்பட்டது போல மோசமான விளைவுகளை அது ஏற்படுத்தும் .2,000 பவுண்ட் குண்டுகள் இஸ்ரேலின் ஆயுதக் களஞ்சியத்தில் உள்ள மிகவும் அழிவுகரமான ஆயுதங்களில் ஒன்றாகும். ஹமாஸை ஒழிக்க இத்தகைய ஆயுதங்கள் அவசியம் என்று இஸ்ரேலிய இராணுவம் வாதிடுகிறது.கடந்த வெள்ளியன்று அமெரிக்க வெளியுறவுத்துறை, இந்த ஆண்டின் தொடக்கத்தில் பைடனால் உத்தரவிடப்பட்ட ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில், காஸா போரின் போது சில சந்தர்ப்பங்களில் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறி அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களை இஸ்ரேல் பயன்படுத்தியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதே நேரம் 'முழுமையான தகவல்கள்' இல்லை என்றும் அந்த அறிக்கை கூறியது, எனவே அமெரிக்கா இஸ்ரேலுக்கான இராணுவ உதவியைத் தொடரலாம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது . அதனால் இஸ்ரேல் எப்படி வேண்டுமானால் அவற்றைப் பயன்படுத்தலாம், அநியாயமும் அட்டூழியமும் புரியலாம் என்ற நிலை இருக்கிறது.

அமெரிக்காவில் இஸ்ரேலுக்கு ஆதரவான பொதுக் கருத்து நிலவுகிறது. காஸா மீதான போர் தொடங்கிய பிறகு அதில் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டு வருவது உண்மை. சிக்கல் என்னவென்றால், அமெரிக்காவின் சுமார் 25 சதவீத நுஎயபெநடஉயட கிறிஸ்தவர்கள் இஸ்ரேல் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தம்மை கிறிஸ்தவ ஸியோனிஸ்டுகளாக அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். அதாவது இயேசு ராஜா ஒரு யூதர் என்று கண் மூடித்தனமான குருட்டு நம்பிக்கையில் தான் அவர்கள் யூத ஆதரவு நிலையில் தொடர்வதை காண கூடியதாக உள்ளது. கிறித்தவ சமய கோட்பாடுகளின் அடிப்படையில் தங்களின் நிலைப்பாடுகளை பைபிளைக் கொண்டு அவர்கள் நியாயப்படுத்துகிறார்கள். கடவுள் யூதர்களுக்கு அந்த நிலத்தை வாக்களித்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

இதுபோக, AIPAC இஸ்ரேலின் லாபி குழுக்கள் அமெரிக்காவில் மிக வலுவாக இருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்க அரசியல் மிகுந்த செல்வாக்கைக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களுக்கு பெரிய அளவில் நிதியுதவி தரும் அமைப்பாக AIPAC இருக்கிறது. இஸ்ரேல் விஷயத்தில் அந்த வேட்பாளர் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார் என்பதைப் பொருத்தே அது நிதி வழங்குகிறது. AIPAC மாதிரியே பல குழுக்கள் இஸ்ரேலுக்கு ஆதரவான கொள்கை உருவாக்கத்துக்காக அமெரிக்காவில் செயல்படுகின்றன.

இப்படியான விஷயங்கள்தாம் அமெரிக்க இஸ்ரேல் உறவை பலமாக்கியிருக்கின்றன. வரலாற்று ரீதியான தொடர்வு, ஒரே மதிப்பீடுகளைக் கொண்டிருப்பதாகக் கருதுவது, ராஜாங்க நலன், மதம், அரசியல் ஆதரவு ஆகியன இவ்விரு நாடுகளையும் பிணைத்திருக்கிறது.

இந்தப் பின்னணியில்தான் இன்றைக்கு பாலஸ்தீனில் கொத்துக்கொத்தாக மக்களைக் கொன்று குவித்தாலும் அமெரிக்கா இஸ்ரேலை விட்டுக் கொடுப்பதில்லை. இஸ்ரேல் எவ்வளவு கொடூரத்தை இழைத்தாலும் அமெரிக்காவின் துணை கொண்டு அதிலிருந்து தப்பிவிடலாம் என்ற மிதப்பில் இஸ்ரேல் இருக்கிறது. அதனால்தான் ஐநா சபையையோ சர்வதேச சட்டங்களையோ அது கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை.

உண்மையில், அமெரிக்க அதிபராக ஆசைப்படும் யாராக இருந்தாலும், இஸ்ரேலை ஆதரித்தால் மட்டும்தான் அது சாத்தியம். அவ்வளவு ஏன், நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட இஸ்ரேல் ஆதரவு அவசியம். அந்த அளவுக்கு அமெரிக்காவில் வலுப்பெற்று நிற்கிறது யூதர்களின் ஆதிக்கம்.தனிப்பட்ட உதவி தொடங்கி, அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தும் பெரும் நிறுவனங்கள் உட்பட பல யூத அமைப்புகளும், இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு தருவதை நிலைநிறுத்தி வருகிறது.

இஸ்ரேல் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது குறித்து நாம் அனைவரும் சுய-நீதிகளைப் பெறுவதற்கு முன்னர், மொசூல் மற்றும் ரக்காவில் அமெரிக்கா ஏராளமான அப்பாவி மக்களைக் கொன்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது" 2016 மற்றும் 2017 இல் ஈராக் நகரங்கள் மீதான அமெரிக்கத் தாக்குதல் காரணமாக பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிரிழப்புகளுக்கு இட்டுச் சென்ற கண்மூடித்தனமான குண்டுவீச்சுகள் இழிபுகழ் பெற்றவையாகும்.

அதன் பின்னர், இரண்டாம் உலகப் போரின் போது பசிபிக் பகுதியில் அமெரிக்கப் போரில் ஹிரோஷிமா மற்றும் நாகசாகிக்கி மேலாக, 69 ஜப்பானிய நகரங்களை நாசம் செய்த கருப்பு வரலாறு யாராலும் மறக்க முடியாத ஒன்றாகும். இதன் மூலம் பாரிய அளவிலான மக்களை, அதே நேரத்தில் அரசாங்கத்துடன் எந்த தொடர்பும் இல்லாத அப்பாவி மக்களை, ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை படுகொலை செய்த அமெரிக்கா ராணுவம் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

"போர் ஒரு பயங்கரமான விடயமாக இருக்கிறது. ஆனால் அதற்கு அர்த்தம் இருக்கப் போகிறது என்றால், அதற்கு ஏதேனும் அறநெறி உணர்வு இருக்கப் போகிறது என்றால், அங்கே ஒரு அரசியல் நோக்கம் இருக்க வேண்டும், அது குறைந்த செலவில் விரைவாக அடையப்பட வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும்.

இந்த கட்டத்தில், "சமாதான செயற்பாட்டாளர்கள் உண்மையில் போருக்கான ஆதரவு செயற்பாட்டாளர்களாக இருக்கிறார்கள், நாங்கள் சமாதான செயற்பாட்டாளர்களாக இருக்கிறோம். எனவே நீங்கள் போரை விரும்பவில்லை என்றால், நீங்கள் வலுவாக இருப்பது நல்லது. உங்கள் எதிரியை நீங்கள் பயமுறுத்த வேண்டும்". இது தான் அமெரிக்கா வெளிவிவகார துறை சார்ந்த சித்தாந்தம் சார்ந்த தத்துவம் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை

அமெரிக்காவில் இருக்கும் யூத கழகங்களில் வற்புறுத்தல் மற்றும் ஆதிக்கம் ஆகியவற்றின் காரணமாக, இஸ்ரேலை கண்மூடித்தனமாக ஆதரிக்கிறது அமெரிக்கா. இதனால், மத்திய கிழக்கில் இஸ்ரேலின் கையும் ஓங்கி நிற்கிறது. இஸ்ரேல், அமெரிக்காவின் 51வது மாநிலம் என்றும் சிலர் கேலியாக குறிப்பிடுவதுண்டு. அந்த அளவுக்கு இஸ்ரேல் – அமெரிக்கா இடையான உறவு பலமானதாக இருந்து வருகிறது. மத்தியக்கிழக்கில் தனக்கொரு நேச நாடு, ஆதிக்க சக்தி வேண்டும் என்று அமெரிக்கா முடிவெடுத்ததும், அமெரிக்காவின் அரசியலில் யூதர்களின் ஆதிக்கமும் இருநாடுகளின் உறவில் பிரச்னை இல்லாமல் நீடிக்க வைக்கின்றன. இந்த சமரச உறவால், இஸ்ரேலை அமெரிக்கா தட்டிக்கேட்க முடியாமல் இருந்து வருகிறது. கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல் நடந்து கொள்ளும் இந்த தேசங்கள் பயங்கரவாதம், ஜனநாயகம் மற்றும் மனித நேயம் சார்ந்த செயல்முறைகள் குறித்து பேச முற்படுவது ஒட்டு மொத்த மனித உரிமைகள் மற்றும் மனித இன மாண்புகளை கொச்சைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஹிட்லர் 1937 இல் ஜேர்மனியின் தலைமைத் தளபதிகளிடம் கூறிய ஒரு இழிவு சார்ந்த அறிக்கைக்கு மற்றொரு நிகழ்வாக உள்ளது, "ஜேர்மனிக்கான கேள்வி என்னவென்றால், மிகக் குறைந்த செலவில் சாத்தியமான மிகப்பெரும் வெற்றியை எங்கே அடைய முடியும் என்பதாகும்."

"ஹிட்லர் யூதர்களை 'காசநோய் பாக்டீரியாவுடன்' ஒப்பிட்டார்" .ஹிட்லரின் யூத-விரோத வாய்வீச்சின் ஒரு பொழிப்புரையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. " ஜான் கெல்லியிடம் கூறியதாக கூறப்படுகிறது.

ஹிட்லரின் கீழான ஜேர்மன் இராணுவம் அது போர் சட்டத்தை முற்றிலுமாக கைவிட்டு, பத்து மில்லியன் கணக்கான மக்களை "அப்பாவி யூத மக்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்ட சிப்பாய்கள் உட்பட" சட்டவிரோதமாகக் கொன்றது. இந்த நிலையில் தான் உலகில் எல்லா சமூக மக்களால் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வெறுப்பு சக்தியாக அடையாளம் காணப்பட்ட யூதர்களை அரவணைத்து இடம் தந்த அரபு மக்களை இன்று கிறித்தவம் மற்றும் யூத இனத்தின் தேசங்கள் படுகொலை செய்து வருகின்றனர். பெரும்பாலான கிறித்தவ சமயத்தைப் பின்பற்றுகின்ற தேவாலயங்களில் கூட யூதர்களின் வெற்றிக்கு பிரார்த்தனை புரிவதை நாம் காண கூடியதாக இருக்கிறது.

ஒரு அநீதிக்கு மற்றொரு அநீதியான செயல்கள் எந்த வடிவத்திலும் சமமான செயலாக இருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் மத்திய தரைக்கடல் பகுதியில் தங்கள் எல்லை மற்றும் அதிகார வளையத்தை விரிவாக்கம் செய்யும் நோக்கில் தான் இவர்களின் இந்த கொடூரமான செயல்பாடுகள் தொடருகிறது. இது வரைக்கும் 35,000 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊனமுற்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் நிச்சயமாக இவர்களுக்கான நிறந்தர தீர்வு ஒன்றே இறுதி வெற்றியாக அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

காலம் எல்லாவற்றையும் நிச்சயமாக நிர்ணயம் செய்தே தீரும். அது எத்தனை காலம் என்பதே இது வரை நம் யாரும் அறிந்து கொள்ள இயலாத சூழலில் இது போன்ற கொடூரமான இனவாத தாக்குதல்கள் தொடருகிறது என்பதே உண்மையாகும்....!

# குழந்தை இலக்கியம் படைப்பது இலகுவான விடயம் அல்ல கவிஞர் இக்பால் அலி இதனை கச்சிதமாக செய்துள்ளார்

## நூல் வெளியீட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்



குழந்தை இலக்கியம் படைப்பது இலகுவான விடயம் அல்ல. தாங்கள் வளஎர்ந்த பின்பு குழந்தைகளாக மாறி கவி படைப்பது என்பது ஒரு வித்தியாசமான கலை. ஒரு வித்துவ நிலைக்கு வந்த பிறகு திரும்பவும் குழந்தைப் பருவத்திற்குச் சென்று அந்த நடையில் எழுதத் துணிவது என்பது அசாத்தியமான விசயம். மகாகவி பாரதியும் அப்படித்தான் குழந்தை இலக்கியம் படைத்தார். அந்த வகையில் ஊடகவிலாளர் கவிஞர் இக்பால் அலி அதனை மிகச் சிறப்பாகச் செய்துள்ளார் என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீ லாங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அக்குறணை ஐடெக் கல்வி நிலையம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடத்திய எழுத்தாளர், ஐடிஎன் வசந்தம் செய்தி சிரேக்ஷ்ட ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலி எழுதிய காலத்தின் கால்கள் (திறன்நோக்கு கட்டுரைத்தொகுதி) குரங்குத் தம்பி (சிறுவர் பாடல்கள் ) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அக்குறணை ஐடெக் கல்வி நிலைய மண்டபத்தில் இயக்குனர் ஐ. ஐனுடீன் தலைமையில் இடம்பெற்றது.

முதன்மை விருந்தினர்களாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், . ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம். அவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர், கண்டி மாவட்ட அமைப்பாளர், ஐக்கிய மக்கள் சக்தி யின் அமைப்பாளர் எம். எச். ஏ. ஹலீம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அக்குறணை பிரதேச செயலாளர் ருவன்திகா குமாரி ஹென்நாயக ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன் வரவேற்புரையினையும், மத்திய மாகாணம் முன்னாள் முதல் அமைச்சர், வட மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் சரத் ஏக்கநாயக்க, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி மனித அபிவிருத்தி தாபனம், இயக்குனர், சர்வதேச விவசாய நிறுவனத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் , சமய, சமூகப் பேச்சாளர். நெலும் ஆடைக் காட்சியகத்தின் உரிமையாளர் தேசமானிய முத்தையாப்பிள்ளை ஶ்ரீகாந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கியதுடன் நூல் பற்றிய அறிமுகத்தை பேராசிரியர் எம். எஸ்.எம். அனஸ், அவர்களும் நயவுரையினை கவிஞர் ரா. நித்தியானந்தன், ஆசிரியை சர்மிளாதேவி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நூல் முதல் சிறப்புப் பிரதிகளைப் தொழிலதிபர் அல்ஹாஜ் டி. எம். எஸ். நிஸைஹிர் ஹாஜியார், மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன், சந்திரவதனா ரட்ணராஜ குருக்கள் பெற்றுக் கொண்டார்.

திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் உள்ள எழுத்தாளர்கள் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



பேருவளை மஹகொட அஹதியா பாடசாலையின் வருடாந்த கூட்டம் ஐ.எல்.எம்.ஸம்ஸ/தீன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.இதன் போது ஏ.ஐ.எம்.ரியாஸ்தீன் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். பிரதேச மாணவர்களின் ஆன்மீக கல்வியை மேம்படுத்த வேண்டி அஹதியா பாடசாலை இயங்குவதாகவும் இதன் முன்னேற்றத்திற்கு ஊர்மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என தலைவர் இங்கு பேசும் போது குறிப்பிட்டார்.அதிபர் உட்பட ஆசிரியர்கள்,பெற்றோர்கள் இக்கூட்டத்தில் பங்கு பெற்றினர்.

(பேருவளை பீ.எம்.முக்தார்)

# வெசாக் தினத்தை முன்னிட்டு கல்பிட்டி சமுர்த்தி வங்கியின் அன்னதானம் வழங்கும் நிகழ்வு



(அரபாத் பஹுர்தீன்)

வெசாக் தினத்தை முன்னிட்டு கல்பிட்டி சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் மரவள்ளிக் கிழங்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஒன்று நேற்று (22) கல்பிட்டி பிரதேச செயலகத்திற்கு முன்னாள் இடம்பெற்றது.

கல்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கல்பிட்டி சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கல்பிட்டி பிரதேச செயளாளர் ஜே.எம். விமல இந்திக ஜயசிங்க தலைமைதாங்கியிருந்தார். அத்துடன் இந்நிகழ்வில் கல்பிட்டி சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளரும், கல்பிட்டி சமுர்த்தி வங்கியின் பதில் முகாமையாளருமான தினுஷா மதுரங்கி பெர்ணான்டோ, கல்பிட்டி சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி உதவியாளர் டபல்யூ. அன்டன் சமந்த பெர்ணான்டோ, திட்ட உதவி மேலாளர் பி.டி.எம். எம். தாஸ் மற்றும் கல்பிட்டி சமுர்த்தி வங்கி மற்றும் கள உத்தியோகத்தர்கள், கல்பிட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டச் சபை தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் இவ் அன்னதான நிகழ்வில் பிரதேச செயலக வீதியால் பயணித்த ஆயிரக்கணக்கான பயணிகள் மற்றும் பாதாசாரிகள் பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தள மாவட்ட தமிழ் மொழிமூல ஊடகவியலாளர்களை விருது வழங்கி கௌரவித்த தூய தேசத்திற்கான இயக்கம்



(அரபாத் பஹுர்தீன் / ராஜி சர்ஹான்)

புத்தள மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் சேவையைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு தூ ய தேசத்திற்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று (23) கற்பிட்டியில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்டத்தில் இயங்கிவரும் தூய தேசத்துக்கான இயக்கம் இளம் அரசியல்வாதியான இஷாம் மரைக்காரின் தலைமையில் ஏராளமான சமூக சேவைகளை இம் மாவட்டத்திற்கு வழங்கி வருகின்றது. கடந்த வருடம் அறிவிக்கப்பட்டு பின்னர் பிற்பேடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது அறிமுகத்தை மேற்கொண்ட இவ் இயக்கம் இளம் துடிப்புமிக்க வேட்பாளர்களை களம் இறக்கியிருந்தது.

முன்னாள் பிரதி அமைச்சரும், புத்தள மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் புத்தள நகரபிதாவுமான மர்/ஹும் கே.ஏ. பாயிஸின் 3ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு தூய தேசத்திற்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் கற்பிட்டி பிரதேசத்தின் தூ யதேசத்திற்கான இயக்கத்தின் அமைப்பாளரான ஹஸ்லான் ரஸாக் தலைமையில் புத்தள மாவட்டத்தின் தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் பதினொரு பேருக்கு விருது வழங்கி கைளரவிக்கும் நிகழ்வு இன்று (23) கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் மர்/ஹும் தம்பி நெய்னா மரிக்கார் ஞாபகார்த்த மண்டபத்தில் பிற்பகல் இடம்பெற்றது.

இதில் புத்தள மாவட்டத்தில் தற்சமயம் ஊடகவியலாளராக தொலைக்காட்சி, அச்சு ஊடகம் மற்றும் இணைய ஊடகம் ஆகியவற்றில் கடமையாற்றும் அனுபவமிக்கவர்களும் இளம் வயதுடையவர்களும் என 10 பேர் வருகை தந்து அவர்களுக்கான நினைவுச் சின்னங்களை தூய தேசத்திற்கான இயக்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

மேலும், விருதினைப் பெற்றுக் கொண்ட அத்தனை ஊடகவியலாளர்களும் ஊடகம் தொடர்பாகவும்,அவர்கள் கடந்து வந்த பாதை தொடர்பான அனுபவத்தினையும், எதிர்காலத்தில் எவ்வாறான செயற்திட்டங்கள் செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும் தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டமை மிகச் சிறந்த அம்சமாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாவனெல்ல பதுரியா மத்திய கல்லூரியில் “பெரகன் ”இரண்டாவது இதழ் வெளியீடு







(எம்.எம்.ஜெஸ்மின்)

மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி யின் ”பெரகன் ” (Paragon) இரண்டாவது இதழின் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ. ரஹ்மான் தலைமையில் ”தியூமினி” மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் டொக்டர் ரைஸ் முஸ்தபா பிரதம அதிதியாகவும், சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எம்.எஸ். எம்.அஸ்லம் விஷேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

# கவியரங்கும், கலைஞர் ஒன்றுகூடலும்



“கவியரங்கும், கலைஞர் ஒன்றுகூடலும் 2024” நிகழ்வு வெள்ளியன்று (23) பிரதேச செயலாளர் தேசபந்து எஸ். எல்.எம். ஹனிபா தலமையில் சம்மாந்துறையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது.

இதில், மூத்த இளம் கலைஞர்கள் கலந்து கொண்டதோடு கலைஞர்களின் படைப்பில் பகல் போசனமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வுகளை கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூசா நெறிப்படுத்தினார்.

இந் நிகழ்வில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆரிப் மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலைஞர்ரகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மனநலமும் ஆலோசனையும் 32

# ஆறுதலுக்கான ஏக்கம்

மன ஆறுதலுக்காக ஏங்குகிறவர்களை நாம் கண்டிருக்கலாம். மனச் சுமைகளை இறக்கி வைக்க வழியில்லாமல் அல்லது வழிதெரியாமல் வாழும் பலரை சந்தித்து இருக்கலாம்.

நாமும் சிலசமயம் மன ஆறுதலுக்காக ஏங்கியிருக்கலாம். அது கிடைக்கும் வரை காத்திருந்த அனுபவமும் இருக்கலாம்.

ஏமாற்றங்களால்,
எதிர்பார்ப்புகள் நிறைவேறாததால்,
புரிதல்கள் இல்லாததால்,
உறவுகள் உடைந்து போவதால்

இப்படி பல காரணங்களால் ஒருவர் மன அமைதி இழந்து போகலாம். அதன் பிறகு ஆறுதலை தேடி அலையலாம்.

துன்பத்தில் இருக்கும் ஒருவருக்கு ஆறுதல் கொடுப்பது அல்லது ஏதேனும் மன வலிகளில் இருந்து விடுதலைக்காக ஏங்கிக் கொண்டு இருப்பார்களுக்கு ஆறுதலை அனுபவிக்க வாய்ப்புக் கொடுப்பது ஒரு மிகப் பெரிய அறச்செயலாகும்.

ஆம்! துன்ப துயரத்தோடு இருக்கும் ஒருவருக்கு எப்படி ஆறுதல் கொடுப்பது என்று நாம் யோசிக்கலாம். ஒரு சில ஆலோசனைகளை இங்கு முன்வைக்கிறோம்.

* அன்பான, அமைதியான வார்த்தைகளால் ஒருவருக்கு ஆறுதல் கொடுக்கலாம்.

* ஒருவர் நொந்து நெருங்கிப் போயிருக்கும் நேரத்தில் அவரின் அருகில் இருப்பதன் மூலம் ஆறுதல் கொடுக்கலாம்.

* ஒருவர் அனுபவிக்கும் துன்பத்துக்கும் அவரின் உடைந்து போன உணர்வுகளுக்கும்

அவர் முகம் கொடுக்கும் அவமானங்களுக்கும்

அவரின் மனதுக்குள் புதைந்து கிடக்கும் ஏக்கங்களுக்கும்

ஆழமாக செவிசாய்ப்பதன் மூலம் ஆறுதல் கொடுக்கலாம்.

* அவருடைய விடிவுக்காக பிரார்த்தனை செய்வதன் மூலம் ஆறுதல் கொடுக்கலாம்

துன்பத்தில் சிக்குண்டு இருப்பவர்களின் துன்ப உணர்வுகளை வெளிப்படுத்த அவகாசம் கொடுத்து அதற்கு பொறுமையுடனும் தேவையுடனும் செவிசாய்த்து அவர்களை அமைதி அடையச் செய்வது ஆறுதல் வழங்குவதில் உயர்ந்ததொரு நிலையாகும்.

அவர்கள் சந்திக்கும் துன்ப அனுபவங்களை தாண்டிச் செல்ல வழிகளையும் நுட்பங்களையும் காட்டிக் கொடுப்பதென்பது அவர்கள் ஆறுதலை அனுபவிக்கவும் ஆக்கப்பூர்வமான மனிதர்களாக அவர்களை மாறிக் கொள்ளவும் நாம் காட்டும் மிகச் சிறந்த வழிகாட்டலும் ஆகும்.

துன்பத்திலும் வேதனையிலும் துவண்டு போய் இருக்கும் மனிதர்களுக்கு ஆறுதல் வழங்கும் வாய்ப்பை பெற்றவர்களாக நாம் இருந்தால் எங்கள் வாழ்க்கை எமக்கு ஒரு உயர்வான சந்தர்ப்பத்தை தந்திருக்கிறது என்று சந்தோஷப்படலாம்.

மற்றவரின் மனநிலையை அறிந்து உதவும் அருள் கிடைக்கப் பெற்றவனாக நான் இருக்கிறேன் என்று மனமகிழ்ச்சி அடையலாம்

துன்பத்தோடு வாழ்கிறவர்களுக்கு ஆறுதல் வழங்கும் மனிதர்களாக நாம் இருந்தால் எங்களை ஆறுதல் படுத்தக் கூடியவனாக இறைவன் இருப்பான்.

பூமியில் இருப்பவர்கள் மீது அன்பு காட்டுகிறவர்களுக்கு வானத்தில் இருப்பவன் அன்பு காட்டுவான் என்பது நபிகளாரின் சத்திய வாக்கு.

யாரெல்லாம் துன்பத்திலும் வேதனையிலும் சிறைப்பட்டு இருக்கின்றார்களோ அவர்களுக்கு ஆறுதல் கொடுத்து.

அவர்களின் இறுகிய உள்ளங்களை இலக வைப்போம்.

அவர்களது வரண்ட உள்ளங்களில் ஈரத்தை கசிய வைப்போம்...!



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

# புத்தளம் உப்பு உற்பத்தியாளர்கள் ரவூப் ஹக்கீமுடன் சந்திப்பு



(எம்.எச்.எம் சியாஜ், எம்.யூ.எம் சனூன்)

புத்தளம் உப்பு உற்பத்தியாளர்களுக்கு சொந்தமான சுமார் 450 வருட வரலாற்றை கொண்ட காணியை ஆக்கிரமித்து கையகப்படுத்த எத்தனிக்கும் நபர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் அழைப்பின் பேரில் ஒரு சில உயர் அதிகாரிகளை சந்திப்பதற்காக நேற்று (22) பாராளுமன்றம் சென்ற போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுடனான சந்திப்பு ஒன்றும் பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.

இதன் போது உப்பு உற்பத்தியாளர்களுக்கும், புத்தளத்து நகர வாழ் மக்களுக்கும் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அநீதிகள் சம்மந்தமாகவும் ஏற்கனவே முன்னாள் நகர சபை உறுப்பினர் ரனீஸ் பதூர்தீனால் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், மேலதிகமான தெளிவுகளும், ஆதாரங்களும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமிடம் நேற்று (22) காண்பிக்கப்பட்டது.

புத்தளம் உப்பு உற்பத்தியாளர் நலன்புரி சங்கத்தின் தலைவர் ரனீஸ் பதூர்தீனால் பாராளுமன்றத்தில் இந்த அநீதிகளுக்கு எதிராக குரல் எழுப்புமாறும் விஷேட வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்பட்டது.

இதன் போது, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் உட்பட புத்தளம் உப்பு உற்பத்தியாளர் நலன்புரி சங்கத்தின் தலைவர் ரனீஸ் பதூர்தீன் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

---

# நாட்டைச் சூழவுள்ள கடல் பரப்பிற்கான வானிலை

**மழை நிலைமை:** மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இக் கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**காற்று:** நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்குதிசையிலிருந்துவீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரைகாணப்படுவதுடன் இக் கடற்பரப்புகளில்காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் இக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**கடல் நிலை:** மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போதுமிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இக் கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இக் கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

மன்னாரிலிருந்து கல்பிட்டி, கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கரையோரத்தைஅண்டிய பகுதிகளில் கடல் அலைகள் 2.5 - 3.0 மீற்றர் உயரம் வரை (இது கரைக்கு வரும் அலைகளின் உயரம் அல்ல) மேலெழும்பக் கூடிய சாத்தியம்காணப்படுகின்றது.

---

# கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலில் இடம்பெற்ற ஈரான் ஜனாதிபதி ரைஸிக்கான பிரார்த்தனை













ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி மர்ஹூம் கலாநிதி இப்ராஹிம் ரைஸி உள்ளிட்ட அதே விபத்தில் உயிரிழந்த ஏனையோரின் மறைவு குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கைக்கான ஈரான் தூதரகம் இணைந்து ஏற்பாடு செய்த இரங்கல் நிகழ்ச்சியும், துஆ பிரார்த்தனையும் புதனன்று (22) மாலை கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

பள்ளிவாசல் சார்பாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரி முஹம்மட் உவைஸ் முஹம்மட் வரவேற்புரையாற்றினார்.

அத்துடன், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் ஈரான் இலங்கைக்கான இஸ்லாமிய குடியரசின் தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றினார்.

பள்ளிவாசல் பிரதம இமாம் அஷ்-ஷேக், அல் ஹாபிழ் எம்.பி.எம். ரிஸ்வான் துஆ பிரார்த்தனை செய்தார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், ஏ.எச்.எம்.பௌசி உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

---

# பாரிய கடலரிப்பை எதிர்கொண்ட சாய்ந்தமருது கடலோரம் பழைய நிலைமைக்கு மீண்டுள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சி





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட ஏற்பட்டிருந்த பாரிய கடலரிப்பைத் தடுப்பதற்கு கரையோரம் பேணும் திணைக்களத்தின் கண்காணிப்பில் கடலோரங்களில் பாரிய முட்டுக் கற்கள் போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது கடலரிப்பு தடுக்கப்பட்டு தமது தொழிலைச் செய்வதற்கு தற்போது சிறப்பான வாய்ப்பு கிடைத்துள்ளதாக ஆழ்கடல் மற்றும் கரைவலை மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

சாய்ந்தமருது கடலோரங்களில் பாரிய பாறாங் கற்கள் போடும் நடவடிக்கைகளினால் கடலரிப்புக்குள்ளான கரையோரத்தில் உள்ள இடங்கள் தற்போது கடல் மண் வார்த்து சற்று விரிவாக காணப்படுகின்றது.

ஏற்கனவே ஆரம்பத்தில் போடப்பட்டு தற்போது மணலால் மூடப்பட்டுள்ள பாரிய பாறாங் கற்களை தோண்டி எடுத்து போடப்பட்டுள்ள கல் அணையை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் இப்படியான மணல் நிறைந்து காணப்படும் பகுதிகளில் மேலும் மணல் நிறைந்து கடற்கரை பகுதியை விரிவாக்கலாம் என கடற்தொழிலாளர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர்.

# சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் நாடு தழுவிய நடை பவனி

## - ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு சாய்ந்தமருதில் வரவேற்பு -





(எஸ்.அஷ்ரப்கான்)


சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையில் நாடு தழுவிய நடை பவனியில் பல நாட்களாக ஈடுபட்டு சாய்ந்தமருதை வந்தடைந்த, அம்பாறை மாவட்டம் மத்திய முகாம் கிராமத்தைச் சேர்ந்த ஜனரஞ்சன கீர்த்திஸ்ரீ தேசபந்து வீரபுத்திர செல்டல் பெரேரா ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ அதிகாரியை வரவேற்கும் நிகழ்வு தொழிலதிபர் இக்ரா மொபைல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் யு.எல். சத்தார் தலைமையில் நேற்று (21.05.2024) இடம்பெற்றது.

இலங்கை நாடு முழுவதுமாக நடைபவனியில் ஈடுபட்டுள்ள இவரை பாராட்டும் நிகழ்வினை பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் மற்றும் சாய்ந்தமருது பொலிசாரோடு இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இவர், சாய்ந்தமருதை வந்தடைந்தபோது சாய்ந்தமருது இக்ரா நிறுவனத்திற்கு அருகாமையில் மாலை அனுவித்து கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அதிதிகளாக கல்முனை உப பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் சிறு குற்ற பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி பத்மஶ்ரீ, கல்முனை இராணுவ இரண்டாம் கட்டளைத் தளபதி சாமர மதுரபெரும மற்றும் தொழிலதிபர் முஹம்மத் நளீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# சீனன்கோட்டை மாணிக்கக்கல் வர்த்தகர் அமைப்பினால் காஸா சிறுவர் நிதியத்திற்கு பாரிய தொகை அன்பளிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிந்தனையில் உருவான காஸா சிறுவர் நிதியத்திற்கு நிதி திரட்டும் பணியில் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

இந்த இக்கட்டான காலங்களில் காஸா மக்களுக்கு இலங்கை தொடர்ந்தும் ஆதரவளித்து உதவி செய்யவுள்ள நிலையில் சீனன்கோட்டை மாணிக்கக்கல் வியாபாரிகள் வர்த்தக அமைப்பினர் மற்றும் சீனன்கோட்டை பள்ளிவாசல் சமூகத்தினராலும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் ஏற்பாட்டில திரட்டப்பட்ட ரூபா. 40,198,902 காசோலை இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கலந்துகொண்டதுடன், ஜாமிய்யா நளீமிய்யாவின் தவிசாளரும், சீனன் கோட்டை பள்ளிவாசல் பிரதி தவிசாளருமான யாகூத் நளீம், சீனன் கோட்டை பள்ளிவாசல் செயலாளர் சிஹாப் மவுஸூன், சீனன் கோட்டை மாணிக்கக்கல் வியாபார அமைப்பின் நிர்வாகப் பிரதாணிகளான றியாஸ் காசிம், றிஸ்வான் நயீம், அஸஹர் ஸவாஹிர், டாக்டர் அரபாத் கரீம், பின்சிபான் பாறுக், பைஸர் ஹமீட், மிப்ராஜ் முபாரக், அர்சாட் பைரூஸ், பிராஸ்தீன் பகூர்டீன், பஸ்லி மர்சூக், அகீல் ஷாபி, ஆதிப் நுபைல், றயீஸூல் ஹக், றிப்கான் றிஸ்வி மற்றும் ஓ.எல். அமீர் அஜ்வாட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கழிவுப் பொருட்களை மூலப் பொருளாக மாற்றும் தந்திரம்



மந்திரத்தால் மாம்பழம் விழாவிட்டாலும், தந்திரத்தால் மாம்பழம் விழும் என்பது செந்தமிழ்ப் பழமொழி. அதுபோல் தனது தந்திரத்தால் சமயலரைக் கழிவுகளையும் எனைய உயிரியல் கழிவுகளையும், உயிரியல் வாயுவாக (டீழைபயள) மற்றும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார் பலாங்கொடை நகரைச் சேர்ந்த முஹம்மது பிர்தௌஸ் றஷீத் என்பவர். அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டதாரி என்பதுடன், ஜாமியா நளீமியாவில் கல்வி கற்று பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

கழிவுப் பொருட்களை மேலான்மை செய்வது பற்றி சுயமாக கற்றுக் கொண்ட முஹம்மத் பிர்தௌஸ் றஷீத் அவர்கள், தனது கண்டுபிடிப்பு முயற்சி பற்றி மேலும் விபரிக்கையில் : நீண்டகாலமாகவே கழிவுப் பொருட்களுக்கு ஒரு தீர்வைக் காணவேண்டும் எனும் எண்ணம் என்னில் இருந்தது. அதற்கு பல்வேறு அம்சங்கள் காரணிகளாகின. குறிப்பாக "சுத்தம் இறை நம்பிக்கையில் முக்கிய பாகமாகும்" எனும் இறைதூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் போதனை, கழிவுப் பொருட்கள் முறையாக மேலான்மை செய்யப் படவேண்டும் எனும் எண்ணக் கரு தோன்றக் காரணமாகியது. அதுபோலவே இன்னும் பல காரணிகளும் இதுவிடயமாக என்னைத் தூண்டின.

மத்திய கிழக்கில் தொழில் புரிந்த பின்னர், 2022ம் ஆண்டின் இருதிப் பகுதியில் நாடு திரும்பிய போது, அந்த எண்ணக் கருவுக்கு செயல் வடிவம் கொடுக்க முனைந்தேன். அதற்கு சாதகமாக பல்வேறு காரணிகளும் அமைந்திருந்தன. அதன்படி 2023ம் வருடம் முற்று முழுதாக கழிவு மேலான்மை சம்பந்தமான பரீட்சாத்த முயற்சியில் ஈடுபட்டேன். பல்வேறு சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில், புதிய உக்திகளை கண்டறிந்ததனூடாக சமலரைக் கழிவுகளில் இருந்து குறைந்த செலவில் வெற்றிகரமாக உயிரியல் வாயு தயாரிக்க முடிந்தது. மேலும் அதன் துணை உட்பத்திப் பொருளாக திறவ சேதனப் பசளையும் பெற்றுக் கொள்ளப் படுகிறது. அவ்வாறு பெற்றுக் கொள்ளப் திறவ சேதனப் பசளை இரசாயன பசளையை விடவும் உயர் ரகமாக அமைந்திருப்பதுவும் பரீட்சாத்த ரீதியாக கண்டறியப் பட்டது. இவ்வாறாக சமயலரைக் கழிவுகளை முற்று முழுதாக பயன் பெறத்தக்க மூலவளாமாக மற்றும் முயற்சியில் தனக்குதவிய இறைவனுக்கே முதற்கண் நன்றிகள் உரித்தாகும் என அவர் தெரிவித்தார்.

இது ஒரு சாதாரண முயற்சியல்ல. மாறாக இதன் பலாபலன்கள். எண்ணிலடங்காதனவாகும். சிற்றளவிலான கழிவு மீழ்சுலற்சி அமைப்புகள் தனித்தனியாக வீடுகளில் அமைக்கப் படுவதனூடாக, வீட்டு பாவனைக்கான எரிவாயு பெற்றுக் கொள்ளப் படுவதுடன், வீட்டுத் தோட்டத்துக்கு தேவையான உரத்தையும் பெற்றுக் கொள்ளலாம். அதனூடாக, நகரசபை மூலமாக சேகரிக்கப் படும் கழிவுகள் 50 மூ த்துக்கும் அதிகாமாக குறைந்து விடும். அதற்கான செலவீனங்களும், அதனால் ஏற்படும் சூழல் பாதிப்புகளும் குறைந்து விடும். நகரசபையினால் சேகரிக்கப்பட்ட மீதி 50 மூக் கழிவுகளையும் புதிய உக்தியை கையாண்டு மேலான்மை செய்யும் போது, தற்போது நிலவும் எந்தவித சூழல் பாதிப்புகளும் ஏற்படாமல் தவிர்க்கப் படுவதுடன், கிடைக்கப் பெரும் எரிவாயுவை மின் உற்பத்திக்குப் பயன் படுத்துவதனூ டக நாட்டின் மின் தேவைக்கும் பரிகாரம் காணலாம். மேலும் அதன் துணை உற்பத்திப் பொருளான திரவர சேதனப் பசளை, நீண்டகாலப் பயன்பாட்டினால் வளமிழந்து செல்லும் பெருந்தோட்ட பயிர்ச் செய்கை நிலத்தை மீண்டும் வளப் படுத்த சிறந்த அமிர்தமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அது மாத்திரமன்றி இந்த புதிய உக்தியானது சர்வதேச நாடுகளுக்கும் மிகவும் வேண்டியதாக அமைவதுடன், செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் குடியேரும் காலம் வந்தாலும் அங்கும் பயன்படுத்தத் தக்க அவசியான ஒரு சிறந்த கழிவு மேலான்மை உக்தியே முஹம்மது பிர்தௌஸ் அவர்கள் கண்டு பிடித்துள்ள உக்தியாகும் என்பது யாரும் பாராட்டத் தக்கதே.

பயாஸா பாஸில்




# வாழ்க்கையின் தடம்


என் அன்புள்ள உம்மாவுக்கு,

இத்தனை நாள் இறைவனோடு மட்டும் பகிர்ந்து கொண்ட என் கஷ்டத்தை இந்நிமிடம் உங்களோடு பகிரப் போகிறேன்.

பெயரில் மட்டும் சுமையாவாக இல்லாமல் அன்று வாழ்ந்து பெண்மணிகளைப் போல வாழ வேண்டும் என்று அவாவோடு இருந்தேன். உங்கள் இஷ்டப்படி என்னை அவசரமாய் திருமணம் செய்து கொடுத்து, நிம்மதி அடைந்து விட்டீர்கள்.

"திருமணத்திற்கு பெண்ணின் விருப்பமும் முக்கியம்" என்றேன். ஆனால், "நாங்கள் செய்தால் எதுவும் சரிதான்" என்றீர்கள். இப்பொழுது என் வாழ்வு தான் சரிகிறதும்மா.. அவர் வீட்டில் தான் எனக்கு இடம் உள்ளது அவர் மனதில் இல்லையும்மா.. "அன்புள்ளவர்" என்றீர்களே அதற்குமவருக்கும் சம்பந்தமே இல்லையும்மா... மார்க்கம் என்றால் என்னவெல்லாமோ சொல்லுகிறாரும்மா.. என்னை கட்டிக் கொடுத்து நிம்மதிப் பெறுமூச்சு விடுகிறீர்களே என்று நானும் பேசாமல் இருந்து விட்டேன். இப்படியே வாழ்ந்தால் என் வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும் என்று பயப்படுகிறேனும்மா.. அனுபவங்களும் காயங்களும் என்னையும் என் வாழ்வையும் மாற்றி விட்டதும்மா.. அதனால் அமல் செய்து மறுமைக்காக விளைச்சல் இடுவதே எனக்கான விமோசனம் என்று உணர்ந்து அதற்காய் திடம் பூணுகிறென்.

வாழ்க்கையின் தடம் மாறியவளாய்,
உங்கள் அன்பின்
!...சுமையா...!



# உங்கள் ஆசைகளை பிள்ளையின் மீது திணிக்காதீர்

வாழ்வு என்பது நிரம்ப சுவாரஷ்யங்கள் நிறைந்தது. உங்களுக்கு நிறைய ஆசைகள் இருந்திருக்கலாம். அவற்றை செயற்படுத்த முடியாமல் போயிருக்கலாம்.. அல்லது நிறைவேறாமல் இருந்திருக்கலாம்..

நீங்கள் அடைய ஆசைப்பட்டு நிறைவேறாத ஒரு விடயத்தை உங்கள் பிள்ளை மீது திணிப்பதும் அவர்களை அதனை செய்யும்படி நிர்ப்பந்திப்பதும் அவ்வளவு நல்லதல்ல.. அது அவர்களுக்குப் பொருத்தமானதுமல்ல.

நீங்கள் வாழ்ந்த உலகம் வேறு.. உங்கள் பிள்ளை வாழும் அல்லது வாழப்போகின்ற உலகம் வேறு... நீங்கள் வாழ்ந்த காலம், சூழல் வேறு... இப்போது அவர்கள் எதிர் நோக்கும் சமூகம், சூழல் வேறு..

நீங்கள் சந்தித்த அதே பிரச்சினைகளை உங்கள் பிள்ளைகள் சந்திக்காது.. நீங்கள் விருப்பப்பட்டு செய்தவைகளை உங்கள் பிள்ளைகள் செய்யுமென்பதில் என்ன நிச்சயம்..!!?

உங்கள் ஆசைகளை , தேவைகளை அவர்கள் மீது பலவந்தமாக திணிக்காதீர்கள்..

அவர்கள் வாழட்டும் சுதந்திரமாக!

வாழவிடுங்கள் பத்திரமாக...!!!



அரபாத் ஷஹுர்தீன்

# ஜெனீவா ஓபன் டென்னிஸ் தொடர்!

## அரையிறுதியில் அதிர்ச்சித் தோலியடைந்தார் ஜெக்கோவிச்

ஜெனீவா ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிப் போட்டியில் செக் குடியரசின் இளம் வீரரான டெமஸ் மாஸ்ஸக்கிடம் 4:6, 6:0, 1:6 என்ற செட்களில் அதிர்ச்சித் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நவோக் ஜெக்கோவிச்.

புகழ் பெற்ற ஜெனீவா ஓபன் டென்னிஸ் தொடர் கடந்த 18ஆம் திகதி ஆரம்பித்து இன்றுடன் நிறைவு பெறுகின்றது. இதில் ஆடவர் ஒற்றையர் மற்றும் ஆடவர் இரட்டையர் என இரு பிரிவுகளாக போட்டித் தொடர் இடம்பெறுகின்றது. அதற்கமைய நேற்று இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் தரப்படுத்தலின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நவோக் ஜெக்கோவிச் , செக் குடியரசின் இளம் வீரரான டெமஸ் மாஸ்ஸக்கை எதிர் கொண்டார்.

இதற்கமைய ஆரம்பித்த முதல் செட் ஆட்டத்தில் இரு வீரர்களும் விட்டுக் கொடுப்பின்றி ஆடிய போதிலும் இளம் வீரரான டெமஸ் மாஸ்ஸக் 6:4 என வெற்றி கொண்டு முன்னிலை பெற்றார்.

பின்னர் தொடர்ந்த 2ஆவது செட்டில் சுதாகரித்து ஆடிய ஜெக்கோவிச் எந்தவித வாய்ப்புக்களையும் டெமஸ் மாஸ்ஸக்கிற்கு வழங்காமல் 6:0 என வெற்றி கொள்ள போட்டி சமநிலை பெற்றது.

பின்னர் தொடர்ந்த தீர்மானமிக்க 3ஆவதும், இறுதியுமான செட்டில் அதிரடி காட்டிய டெமஸ் ஜெக்கோவிச்சுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து 6:1 என வெற்றி கொள்ள விறுவிறுப்பான அரையிறுதிப் போட்டி 6:4 , 0:6 மற்றும் 6:1 என டெமஸ் மாஸ்க் வசமானதுடன் முதல் நிலை வீரரான ஜெக்கோவிச் அதிர்ச்சித் தோல்வியுடன் தொடரிலிருந்து வெளியேறினார்.

# 5ஆவது லங்கன் பிரீமியர் லீக் ஏலம்

## கோல் மார்வெல்ஸ் அணிக்காக ஏலம் போன முஹம்மது சிராஸ்




இலங்கை ஏ அணியின் கிரிக்கெட் வீரரான முஹம்மது சிராஸ் இடம்பெறவுள்ள 5ஆவது லங்கன் பிரீமியர் லீக் தொடரின் ஏலத்தில் கோல் மார்வெல்ஸ் அணிக்காக பத்தாயிரம் அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளார்.

கண்டியின் 1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி பிறந்த முஹம்மது சிராஸ், கண்டி மதீனா கல்லூரியின் பழைய மாணவராவார். வலதுகை வேகப்பந்து வீச்சாளரான சிராஸ் இலங்கையின் முன்னனிக் கழகங்களான பி.ஆர். சி , கோல்ட்ஸ் , குருநாகல கொம்பைனட் பதினொருவர் ஆகிய கழகங்களுக்காக தன் திறமையினை வெளிக்காட்டியிருந்தார். அதனால் முன்னர் இடம்பெற்ற லங்கன் பிரீமியர் லீக் தொடர்களில் தம்புள்ளை மற்றும் காலி கிளேடியேட்டர்ஸ் அணிகளுக்காக 3 போட்டிகளில் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

மேலும் முதல் தர கழகங்களுக்கு இடையிலான 3 மற்றும் 4 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டிகளில் பந்துவீச்சில் பிரகாசித்தமையால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கு இலங்கை தேசிய அணியின் 15 வீரர்கள் கொண்ட குழாத்தில் முதல் முறையாய் இணைத்துக் கொள்ளப்பட்டார் சிராஸ். இருப்பினும் அவருக்கு அங்கு சர்வதேச அறிமுகத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனாலும் முதல் தடவையாக இலங்கை அணி தென்னாபிரிக்காவில் வைத்து டெஸ்ட் தொடரை தனதாக்கியிருந்தது.

இதுவரையில் 43 முதல்தர ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள சிராஸ் 73 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார். இதில் இவரது சிறந்த பந்துவீச்சு பிரதியாக 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தியமை பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக இம்மாதம் இடம்பெற்ற இலங்கை ஏ மற்றும் ஆப்கானிஸ்தான் ஏ அணிகளுக்கு இடையிலான உத்தியோகபூர்வமற்ற 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கு இணைக்கப்பட்ட சிராஸ் அதில் மிகச் சிறமையான பந்துவீச்சினை வெளிப்படுத்தி 8 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டி இலங்கை ஏ அணி தொடரை வெற்றி கொள்ள முக்கிய பங்குதாரராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.


இந்நிலையில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற 5ஆவது லங்கன் பிரீமியர் லீக் தொடருக்கான ஏலத்தில் முஹம்மது சிராஸின் பெயரும் உள்வாங்கப்பட்டிருந்தது. அடிப்படை விலையாக பத்தாயிரம் அமெரிக்க டொலருக்கு ஏலமிடப்பட்ட சிராஸை முதல் சுற்றில் எந்த அணிகளும் எடுக்காமல் மௌனம் காத்தது. இது சிராஸிற்கு மாத்திரம் அல்ல இலங்கை தேசிய அணியின் நட்சத்திர ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பெத்தும் நிசங்கவிற்கும் இதே நிலையே காணப்பட்டது.

பின்னர் அன்சோல்ட் செய்யப்பட்ட வீரர்கள் 2ஆவது சுற்று ஏலத்தில் மீண்டும் அறிவிக்கப்பட முஹம்மது சிராஸை கோல் மார்வெல்ஸ் அணி அடிப்படை விலையான பத்தாயிரம் அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்தது.

மேலும், தமிழ் பேசும் வீரர்களான விஜயகாந்த் வியாஸ்காந்த ஜப்னா கிங்ஸ் அணியால் தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருக்க, தீசன் விதூசன், அருள் பிரகாசம், மார்வின் அபினாஸ் ஆகியோர் அவ்வணியால் அடிப்படை விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் நடப்பாண்டின் லங்கன் பிரீமியர் லீக் தொடரில் இவர்கள் சாதிக்க எங்கள் முன்கூட்டிய வாழ்த்துக்கள்.

# 9ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடர்

## ஏற்பாடுகள் பூர்த்தி இன்னும் இருப்பது 6 நாட்கள்




9ஆவது ஆடவர் ரி20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து 29ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஆடவர் ரி20 உலகக்கிண்ணத் தொடர் இரு வருடங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் 8 அத்தியாயங்கள் நிறைவுக்கு வந்திருக்க 9ஆவுத அத்தியாயம் இன்னும் 6 நாட்களே உள்ள நிலையில் இத் தொடருக்கான அத்தனை ஏற்பாடுகளும் நிறைவுக்கு வந்துள்ளது. மேலும் இத் தொடரில் மொத்தம் 20 நாடுகளின் அணிகள் பங்கேற்கின்றது. கடந்த ரி20 உலகக்கிண்ணத் தொடர்களில் 16அணிகளே பங்கேற்றிருக்க இம்முறை அதிகப்படியான அணிகள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் மொத்தம் 55 போட்டிகள் இடம்பெறவுள்ளது.

மேலும் முதல் முறையாக அமெரிக்கா, பபுவா நியூகினியா நேபாளம் மற்றும் உகண்டா அணிகள் முதல் முறையாக உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கின்றமை கிரிக்கெட்டின் வளர்ச்சியைக் காட்டிநிற்கின்றது.அத்துடன் இத் தொடருக்கு பாகிஸ்தான் அணி தவிர்ந்த மற்றைய அத்தனை அணிகளும் தங்கள் 15 வீரர்கள் கொண்ட குழாத்தினை அறிவித்துள்ளதுடன் இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் அமெரிக்கா நோக்கி பயணித்துள்ளன.

அத்துடன் எதிர்வரும் 27ஆம் திகதி நாளை பயிற்சி ஆட்டங்கள் ஆரம்பமாகின்றன. இதில் இலங்கை அணி 2 பயிற்சி போட்டிகளில் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இத் தொடரில் பங்கேற்கின்ற 20 அணிகள் ஒரு குழுவில் 5 அணிகள் வீதம் 4 குழுக்கலாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதில் இலங்கை அணி குழு டீ இல் இடம்பெற்றுள்ளது. இலங்கை அணியுடன் தென்னாபிரிக்கா , பங்களாதேஷ், நெதர்லாந்து மற்றும் நேபாள அணிகள் இடம்பெற்றுள்ளன. இதில் இலங்கை அணி எதிர்வரும் 3ஆம் திகதி தென்னாபிரிக்க அணியை நியூயோர்கில் உள்ள நசுஊ சர்வதேச மைதானத்தில் சந்திக்கின்றது.







மேலும் 2ஆவது மற்றும் 3ஆவது போட்டிகளில் 7ஆம் திகதி பங்களாதேஷ் அணியை டெக்சாஸ் மைதானத்திலும் 11ஆம் திகதி நேபாளம் அணியை ப்ளோரிடா மைதானத்திலும் சந்திக்கின்றது. அத்துடன் தனது குழு நிலை இறுதி லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து அணியை எதிர்வரும் 16ஆம் திகதி சென் லூசியாவிலும் சந்திக்கவுள்ளது. முதல் குழு நிலை லீக் ஆட்டங்கள் முடிவில் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் சுப்பர் 8 லீக் சுற்றில் பங்கேற்கும்.

சுப்பர் 8 சுற்றுக்குத் தெரிவாகும் அணிகள் குழு 1 மற்றும் குழு 2 என பிரிக்கப்பட்டு மற்றுமொரு லீக் ஆட்டம் இடம்பெறும். பின்னர் குழு 1 மற்றும் குழு 2 இல் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்று அதிலிருந்து இரு அணிகள் 9ஆவது ரி20 உலகக்கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வண்ணம் போட்டி அட்டவணை அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.